தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

## 08.10.2013

**கருகிய மானாவாரி விவசாயப் பயிர்கள்**

மதுரை மாவட்டம், தே.கல்லுப்பட்டி மற்றும் பேரையூர் பகுதிகளில் மானாவாரி விவசாயப் பயிர்கள் கருகின.

தே.கல்லுப்பட்டி, பேரையூர் பகுதிகளில் கடந்த ஆகஸ்ட் மாதம் கடைசி வாரத்தில் சுமார் 145 மி,மீ. மழை பதிவானது. இம்மழையினால் மகிழ்ச்சி அடைந்த விவசாயிகள் தங்கள் மானாவாரி நிலங்களில் கம்பு, தீவனச் சோளம், குரும்பு சோளம், மக்காசோளம், பாசிப் பயறு, உளுந்து, குதிரைவாலி மற்றும் பல்வேறு தானிய வகைகளை விதைத்தனர்.

அதன் பின்னர் பெய்த லேசான மழையால் செடிகள் முளைத்து தழைத்தன. ஆனால், செப்டம்பர் 2 வது வாரத்திலிருந்து மழை பொய்த்தது. வெயில் கடுமையானதால், செடிகள் வாடி கருகின. தொடர்ந்து மழை பெய்யாததால், சுமார் 15,000 ஏக்கரில் பயிர் செய்யப்பட்டிருந்த மானாவாரி பயிர்களில் சுமார் 11,000 ஏக்கர் முற்றிலும் கருகின.

இது சம்பந்தமான ஆய்வுக் கூட்டம், வேளாண் துறை, தோட்டக் கலை, வருவாய்த் துறையினரால் நடத்தப்பட்டது. அதன் முடிவில், பயிர்களின் நிலைமை குறித்து மாவட்ட நிர்வாகத்துக்கு தெரியப்படுத்தப்பட்டது.

கடந்த 10 ஆண்டுகளாக இப்பகுதியில் போதிய மழை இல்லாததால், மானாவாரி விவசாயத்தை முற்றிலுமாக கைவிட வேண்டிய சூழ்நிலைக்கு, விவசாயிகள் தள்ளப்பட்டுள்ளனர்.

**உழவன் நண்பன் ஆய்வுக் கூட்டம்**

விருதுநகர் மாவட்டம் ம. ரெட்டியபட்டி வேளாண் விரிவாக்க மையத்தில் உள்ள கூட்டரங்கில் உழவன் நண்பன் ஆய்வுக்கூட்டம் வேளாண் உதவி இயக்குனர் நாச்சியார் அம்மாள் முன்னிலையில் நடைபெற்றது.

அட்மா திட்ட வேளாண் அலுவலர் சுந்தரவள்ளி தொழில் நுட்ப உரையாற்றினார். விவசாயிகள், வேளாண் அலுவலர்கள் கூறும் தொழில் நுட்பங்களை கடைபிடிப்பதன் மூலம் கூடுதல் மகசூல் பெறலாம் எனவும், அதற்கு சிறந்த விவசாயிகளுக்கான பரிசு அரசால் வழங்கப்படுகிறது. ஒவ்வொரு பயிர் விதைப்பதற்கு முன்பும் மண்ணை பரிசோதித்து தேவையான உரம் இடுவதால் கூடுதல் மகசூல் பெற முடியும் என தெரிவித்தார். கூட்டத்தில் ஞானப்பிரகாஷ், பாக்கியராஜ், சோலைராஜ் ஆகியோர் தொழில் நுட்ப அனுபவங்களை கூறினர். அட்மா திட்ட வட்டார தொழில் நுட்ப மேலாளர் பிரேமா நன்றி கூறினார்.

**பன்றிகள் தொல்லை: ஆட்சியரிடம் விவசாயிகள் மனு**

திருத்தணி அருகே விவசாயிகளின் விளைநிலங்களை சேதப்படுத்தி வரும் காட்டுப் பன்றிகளைக் கட்டுப்படுத்த திருவள்ளூர் மாவட்ட ஆட்சியரிடம் மனு அளிக்கப்பட்டது.

திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மக்கள் குறைதீர்வுக் கூட்டம் திங்கள்கிழமை நடைபெற்றது. இதில் திருத்தணி மலைப்பகுதியைச் சேர்ந்த விவசாயிகள் ஏராளமானோர் ஆட்சியரிடம் கோரிக்கை மனு அளித்தனர்.

மனு விவரம்:

திருத்தணி மலையடிவாரத்தைச் சுற்றியுள்ள பகுதிகளில் நெல், கரும்பு, சோளம், கேழ்வரகு உள்ளிட்டவற்றை பயிர் செய்து வருகிறோம்.

இந்நிலையில் திருத்தணி மலைப்பகுதியில் சுற்றித்திரியும் காட்டுப் பன்றிகள், இரவு நேரங்களில் விளைநிலங்களில் புகுந்து பயிர்களை சேதப்படுத்தி வருகின்றன. இதனால் எங்களுக்கு கடும் நஷ்டம் ஏற்படுகிறது. இது குறித்து வனத்துறையினரிடம் பல முறை புகார் மனுக்கள் அளித்தும் பயனில்லை.

மிரட்டும் வனத்துறையினர்:

வயல்வெளியை சேதப்படுத்தும் பன்றிகள் குறித்து வனத்துறையினரிடம் புகார் அளித்தால், மின்சார வேலி அமைத்து கொள்ளுங்கள் என கூறுகின்றனர். மேலும் வயல்வெளிக்கு வரும் பன்றிகள் இரவில் கிணற்றில் தவறி விழுந்து இறந்தால் கூட, விவசாயிகள் மீது பழி சுமத்துகின்றனர். மேலும் கைது செய்வதாக கூறி ரூ.2 லட்சம்

வரை பேரம் பேசுகின்றனர். இதனால் எங்களின் வாழ்வாதாரம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

எனவே மாவட்ட ஆட்சியர் உரிய நடவடிக்கை எடுத்து வயல்களை சேதப்படுத்தும் காட்டுப் பன்றிகளைக் கட்டுப்படுத்தவும், விவசாயிகளை மிரட்டும் வனத்துறையினர் மீது நடவடிக்கை எடுக்கவும் வேண்டும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**2 ஆயிரம் ஏக்கர் நிலக்கடலை பயிர் பாதிப்பு: விவசாயிகள் வேதனை**

கமுதி பகுதியில் மழை இல்லாமல் சுமார் 2 ஆயிரம் ஏக்கரில் விதைக்கப்பட்ட நிலக்கடலை பயிர்கள் கருகுகின்றன. இதனால் விவசாயிகள் வேதனை அடைந்துள்ளனர்.

கமுதி தாலுகாவைச் சேர்ந்த மண்டலமாணிக்கம், வலையபூக்குளம், சின்ன உடப்பங்குளம், அய்யன்கோவில்பட்டி, தலைவநாயக்கன்பட்டி, ராமசாமிபட்டி, கல்லுப்பட்டி, நீராவி, அபிராமம், உடையநாதபுரம், தரைக்குடி, புனவாசல், பேரையூர், செங்கப்படை,தோப்படைபட்டி,கோவிலாங்குளம், பெருநாழி உள்பட 100க்கும் மேற்பட்ட கிராமங்களில் நிலக்கடலை சாகுபடி செய்யப்பட்டு வருகிறது.

ஆடி மாத கடைசியிலும், ஆவணி துவக்கத்திலும் பெய்த மழையை நம்பி நிலக்கடலை விதைக்கப்பட்டது.

நன்றாக முளைத்து செடிகள் உருவாயின. ஆனால் அடுத்தடுத்து மழை பெய்யாமல் போனதால் நிலக்கடலை செடிகள், தண்ணீரின்றி வளர்ச்சி குன்றி கருகவும் தொடங்கி உள்ளன.

கடந்த ஒரு மாதத்திற்கு மேல் கமுதி தாலுகாவில் மழையே இல்லை. இன்னும் சில நாள்களில் மழை பெய்யாமல் போனால் கடலைச் செடிகள் அனைத்தும் கருகி மடியும் நிலை உள்ளது.

இதனால் ஒவ்வொரு விவசாயிக்கும் ரூ.5,000 முதல் ரூ.50,000 வரை நஷ்டம் ஏற்படும் என கூறப்படுகிறது.

**பவானிசாகர் நீர்மட்டம்**

பவானிசாகர் அணையின் நீர்மட்டம் திங்கள்கிழமை நிலவரப்படி 74.02 அடியாக இருந்தது.

அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 1,300 கனஅடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 1,179 கனஅடி நீரும், வாய்க்காலில் 2,560 கனஅடி நீரும் திறந்துவிடப்பட்டது. அணையில் நீர் இருப்பு 12.72 டி.எம்.சி.

**கோபியில் வாழைத்தார் ரூ. 8.50 லட்சத்திற்கு ஏலம்**

கோபியில் வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத்தில் வாழைத்தார் ஏலம் சனிக்கிழமை நடைபெற்றது. இதில் ரூ. 8.5 லட்சத்திற்கு வாழைத்தார் ஏல விற்பனை ஆனது.

ஏல விற்பனை விலை விபரம்:

கதளி கிலோ ரூ. 35-க்கும், நேந்திரன் கிலோ ரூ. 40.50-க்கும், செவ்வாழை 1 தார் ரூ. 680-க்கும், தேன்வாழை 1 தார் ரூ. 600-க்கும், பூவன் 1 தார் ரூ. 540-க்கும், மொந்தன் 1 தார் ரூ. 510-க்கும், பச்சைநாடன் 1 தார் ரூ. 310-க்கும், ரஸ்தாளி 1 தார் ரூ. 425-க்கும் அதிகபட்சமாக விலை போனது. மொத்தம் 8 ஆயிரம் வாழைத்தார்கள் ஏல விற்பனைக்கு வந்திருந்தன. ஏல விற்பனை மதிப்பு ரூ. 8 லட்சத்து 50 ஆயிரம். வரும் வாரத்தில் சரஸ்வதி பூஜை, ஆயுத பூஜையை முன்னிட்டு வாழைப்பழங்களின் தேவை அதிகரிக்கும்போது வாழைத்தார் விலையும் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தேங்காய் ஏலம்: கோபி வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத்தில் தேங்காய் ஏலம் சனிக்கிழமை நடைபெற்றது. ஏல விற்பனை விலை விபரம்:

தேங்காய் ஒன்று குறைந்தபட்சமாக ரூ. 8-க்கும், அதிகபட்சமாக தேங்காய் ஒன்று ரூ. 14.70-க்கும் ஏலத்தில் விலை போனது.

கோபி மற்றும் சுற்றுப் பகுதிகளிலிருந்து குறைந்த அளவு தேங்காய் வரத்தே இருந்தது. இதனால், கோபியில் தேங்காய் விலை உயர்ந்து காணப்பட்டது. மொத்தம் 6 ஆயிரம் தேங்காய்கள் ரூ. 80 ஆயிரத்திற்கு விற்பனையாயின.

**சிறப்பு மண், நீர் பரிசோதனை முகாம்**

திருவண்ணாமலை நடமாடும் மண் பரிசோதனை கூடம் மற்றும் வெம்பாக்கம் வட்டார வேளாண்மைத் துறையும் இணைந்து நடத்திய சிறப்பு மண் மற்றும் நீர் பரிசோதனை முகாம் அக்டோபர் 4,5 ஆகிய இரு தினங்கள் நடைபெற்றது.

செய்யாறு வட்டம் சிறுநாவல்பட்டு, சீவரம், சித்தாத்தூர், மாமண்டூர் ஆகிய கிராமங்களில் நடைபெற்ற முகாமில் ஆயிரம் விவசாயிகளிடமிருந்து மண் மாதிரி சேகரிக்கப்பட்டது. மேலும் நீர் பரிசோதனையும் மேற்கொள்ளப்பட்டது. நடமாடும் மண் ஆய்வு கூட வேளாண்மை அலுவலர் ஆர்.புஷ்பா, எஸ்.சுகப்ரியா, உதவி வேளாண்மை அலுவலர் எம்.சுரேஷ்குமார் ஆகியோர் கொண்ட குழுவினர் கிராமப்பகுதிகளில் சேகரிக்கப்பட்டவற்றை பரிசோதனை செய்தனர்.

நீரின் தன்மை, மண் வளம், பயிரிட உள்ள பயிர்களுக்குண்டான பேரூட்டச் சத்து, நுண்ணூட்டச் சத்தின் அளவு ஆகியவற்றின் விபரங்களை விவசாயிகளுக்கு தெரிவித்து விழிப்புணர்வு ஏற்படுத்தினர். வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் கோ.பாண்டியன், அலுவலர் கே.முருகன், உதவி வேளாண்மை அலுவலர்கள் கே.தங்கராசு, எ.அண்ணாமலை, ஆர்.சீனுவாசன், அட்மா திட்ட மேலாளர் ஜி.சிவசங்கர், தொழில்நுட்ப வல்லுநர்கள் எஸ்.நடராசன், எம்.பழநி ஆகியோர் முகாமுக்கான ஏற்பாடுகளை செய்து இருந்தனர்.

**விதைக் கிராமத் திட்டப் பயிற்சி**

புதுசத்திரம் வட்டார வேளாண் துறை சார்பில், தாத்தயங்கார்பட்டி, காரைக்குறிச்சி, மின்னாம்பள்ளி மற்றும் கரடிப்பட்டி ஆகிய கிராமங்களில் விதைக் கிராமத் திட்டப் பயிற்சி நடைபெற்றது.

இந்தத் தொடக்க விழாவுக்கு விதைச் சான்று உதவி அலுவலர் சுப்பிரமணியம் தலைமை வகித்து, விதைப் பண்ணை அமைப்பது குறித்துப் பேசினார்.

வேளாண் உதவி இயக்குநர் ராஜகோபால், வேளாண் துறையில் செயல்படுத்தபடும் திட்டங்கள் குறித்தும், வேளாண்மை அலுவலர் தனலட்சுமி பாசிப் பயிறு, நிலக் கடலைச் சாகுபடி தொழில்நுட்பங்கள் குறித்தும் விவசாயிகளுக்கு விளக்கினர்.

இதில், கரடிப்பட்டி ஊராட்சி மன்றத் தலைவர் ராஜேந்திரன், துணை வேளாண் அலுவலர் வி.ராஜேந்திரன், உதவி வேளாண் அலுவலர்கள் பழனிவேல், ரமேஷ் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**பிலிக்கல்பாளையம் வெல்ல ஏலச் சந்தையில் விலை உயர்வு**

பரமத்தி வேலூர் வட்டம், பிலிக்கல்பாளையம் வெல்ல ஏலச் சந்தையில் வெல்லத்தின் விலை உயர்ந்துள்ளதால், கரும்பு பயிர் செய்துள்ள விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

பரமத்தி வேலூர் வட்டத்தில் சோழசிராமணி, ஜேடர்பாளையம், அய்யம்பாளையம், பிலிக்கல்பாளையம், கபிலர் மலை, அண்ணாநகர், பரமத்தி மற்றும் வேலூர் உள்ளிட்ட பகுதிகளில் ஏராளமான ஏக்கரில் கரும்பு பயிர் செய்யப்பட்டுள்ளது. இங்கு விளையும் கரும்புகளை வெல்ல ஆலை உற்பத்தியாளர்கள் வாங்கி, சாறு பிழிந்து அச்சு மற்றும் உருண்டை வெல்லங்களாகத் தயார் செய்கின்றனர்.

தயார் செய்யப்பட்ட வெல்லங்கள் 30 கிலோ கொண்ட சிப்பங்களாகக் கட்டப்பட்டு, வெல்ல ஏலச் சந்தைக்கு கொண்டு வரப்படுகின்றன. புதன் மற்றும் சனிக்கிழமைகளில் வெல்ல ஏலச் சந்தையில் நடைபெறும் ஏலத்தில் தரம் பிரிக்கப்பட்டு ஏலம் விடப்படுகிறது. ஏலம் எடுப்பதற்கு சென்னை, மதுரை, பெங்களூர் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து ஏராளமான வியாபாரிகள் வந்து செல்கின்றனர்.

ஏலம் எடுக்கப்பட்ட வெல்லங்கள் திருச்சி, மன்னார்குடி, திருவாரூர், கும்பகோணம், தஞ்சை, மதுரை,சிவகங்கை உள்ளிட்ட பகுதிகளுக்கும், கர்நாடகம், கேரளம் உள்ளிட்ட வெளி மாநிலங்களுக்கும் அனுப்பப்படுகின்றன.

கடந்த வாரம் நடைபெற்ற ஏலத்தில் அச்சு வெல்லம் ரூ.950 முதல் ரூ.1,100 வரையிலும், உருண்டை வெல்லம் ரூ.900 முதல் ரூ.1,050 வரையும் ஏலம் போனது. சனிக்கிழமை நடைபெற்ற ஏலத்தில் அச்சு வெல்லம் ரூ.1,250 முதல் 1,400 வரையிலும், உருண்டை வெல்லம் ரூ.1,250 முதல் 1,300 வரையிலும் ஏலம் போனது.

கடந்த வாரத்தைக் காட்டிலும் இந்த வாரம் வெல்லத்தின் விலை உயர்ந்துள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

**கரும்பு விவசாயிகளிடம் கருத்துக் கேட்பு**

சென்னை உயர் நீதிமன்றத் தீர்ப்பின்படி விவசாயிகள், அங்கத்தினர் மற்றும் வழக்கு மனுதாரர்களிடம் கருத்துக் கேட்பு கூட்டம் சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் திங்கள்கிழமை நடைபெற்றது.

சர்க்கரை ஆலைகளுக்கு குறிப்பிட்ட பகுதிகளைப் பிரித்து கொடுத்து, அந்தப் பகுதியிலுள்ள விவசாயிகள் சர்க்கரை ஆலைகளுக்கு தங்களது கரும்புகளை அனுப்பி வந்தனர். விவசாயிகளுக்கும், சர்க்கரை ஆலை நிர்வாகத்துக்கும் இடையே ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் காரணமாக சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது.

உயர் நீதிமன்றத் தீர்ப்பின்படி, கரும்பு சாகுபடி பரப்பினை சர்க்கரை ஆலைகளுக்குப் பிரித்து அளித்தல் தொடர்பாக விவசாயிகள், அங்கத்தினர்கள் மற்றும் வழக்கு மனுதாரர்கள் கருத்துக் கேட்பு கூட்டம் சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்துக்கு தமிழக சர்க்கரைத் துறை இயக்குநர் மகேசன் காசிராஜன் தலைமை வகித்தார். மாவட்ட ஆட்சியர் க.மகரபூஷணம் முன்னிலை வகித்தார்.

இந்தக் கருத்துக் கேட்பு கூட்டத்தில் ஏராளமான விவசாயிகள் கலந்து கொண்டு, ஒவ்வொரு சர்க்கரை ஆலைகளிலும் குறித்தக் காலத்தில் உரம், பூச்சிக்கொல்லி மருந்துகள், விவசாயத் தொழில்நுட்ப அறிவுரைகள் மற்றும் கடனுதவிகள் கிடைக்கவில்லை என்றும், நீண்ட அலைக்கழிப்புக்கு பிறகு தான் கரும்புக்கான பணத்தையும் பெறுவதாகக் கூறினர்.

கரும்புக்கு உடனடியாக பணம் பட்டுவாடா, சொட்டு நீர் பாசனம் அமைத்து தருதல், சர்க்கரை ஆலைகளுக்கு கரும்பு தரும் விவசாயிகள் உறுப்பினராக பதிவு செய்யும் போது அதை எளிய முறையில் நடைமுறைப்படுத்த வேண்டும் எனவும் சர்க்கரைத் துறை இயக்குநரிடம் விவசாயிகள் கேட்டுக் கொண்டனர்.

மேலும், சில விவசாயிகள், தங்களுக்கு விருப்பமான சர்க்கரை ஆலைகளுக்கு கரும்புகளைக் கொண்டு செல்ல விருப்பம் தெரிவித்தனர்.

நீதிமன்ற உத்தரவின்படி வந்திருந்த குழுவினர் விவசாயிகளின் கருத்துக்களைக் கேட்டு அதைப் பதிவு செய்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் தமிழ்நாடு சர்க்கரைக்கழகப் பொதுமேலாளர் ஜி.விஜயா, மாவட்ட வருவாய் அலுவலர் எஸ்.செல்வராஜ், சேலம் கூட்டுறவுச் சர்க்கரை ஆலையின்

மேலாண்மை இயக்குநர் மலர்விழி, சுப்பிரமணிய சிவா கூட்டுறவுச் சர்க்கரை ஆலையின் மேலாண்மை இயக்குநர் பி.ரத்தினவேலு, தனலட்சுமி சீனிவாசன் சர்க்கரை ஆலையின் இயக்குநர் செந்தில்ராஜன், பண்ணாரி அம்மன் சர்க்கரை ஆலையின் தலைமை நிர்வாகி என்.சோலைராஜன் ஆகியோர் பங்கேற்றனர்.

**மேட்டூர் அணையில் செம்மண் கடத்தப்படுவதால் நீர்வளம் பாதிக்கும் அபாயம்**

சேலம் மாவட்டம், மேட்டூர் அணைப் பகுதியில் இருந்து செம்மண் கடத்தப்படுவதால் நீர்வளம், நிலவளம் பாதிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

மேட்டூர் அணையின் நீர்தேக்கப் பகுதியான திப்பம்பட்டியில் கடந்த ஒரு மாதமாக செம்மண் கடத்தல் நடைபெற்று வருகிறது. இரவு பத்துமணி முதல் அதிகாலை வரை இந்தக் கடத்தல் நடைபெறுவதாகக் கூறப்படுகிறது.ஜேசிபி இயந்திரம் மூலம் 20-க்கு மேற்பட்ட டிராக்டர்களில் செம்மண் அள்ளப்பட்டு கடத்தப்படுகிறது. இதற்காக வாகனங்கள் வந்து செல்லுவதற்காக மண் சாலை அமைக்கப்பட்டுள்ளது.

அதிகாரிகளின் அலட்சியம் காரணமாகவே இந்த செம்மண் திருட்டு தொடர்ந்து நடைபெற்று வருவதாகக் கூறப்படுகிறது. கிராமங்களில் தங்கி கிராம நிர்வாக அலுவலர்கள் பணி புரியாததால் அவர்களால் மண் திருட்டை தடுக்கமுடியவில்லை என்று கூறப்படுகிறது.

மேட்டூர் அணையை ஒட்டியுள்ள திப்பம்பட்டி காவிரி கரையில் தொடர்ந்து செம்மண் திருடப்படுவதால், நீர்வளம் மற்றும் நிலவளம் பாதிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இதனை தடுத்து நிறுத்த மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**பாசன நீர்: பொதுப்பணித் துறை மீது புகார்**

அமராவதி அணையில் இருந்து கரூர் மாவட்டத்துக்கு தண்ணீர் திறக்கும் பிரச்னையில் கர்நாடக அரசுபோல பொதுப்பணித்துறை செயல்படுகிறது என அமராவதி பாசன விவசாயிகள் சங்கத்தினர் புகார் தெரிவித்தனர்.

இதுகுறித்து திங்கள்கிழமை நடந்த குறைதீர் கூட்டத்தில் சங்கத்தினர் அளித்த கோரிக்கை மனு:

கரூர் மாவட்டம், சின்னதாராபுரம் ராஜவாய்க்காலானது அமராவதி ஆற்றின் பழைய ஆயக்காட்டு பகுதியாகும். அமராவதி ஆற்றிலிருந்து தண்ணீர் திறக்கையில் ராஜவாய்க்காலுக்கே முன்னுரிமை அளிக்க வேண்டும் என்பது இந்திய நதி நீர் பங்கீட்டுச் சட்டப்படியும், சர்வதேச நதிநீர் சட்டப்படியும்

வழங்கப்பட்ட உரிமையாகும். ஆனால் கடந்த 21.11.2012 அன்று அணையில் 48 கன அடி தண்ணீர் இருந்தும் பழைய ஆயக்காட்டு பகுதிக்கு0த் தண்ணீர் திறந்து விடப்படவில்லை.

இந்நிலையில் நிகழாண்டில் ராஜவாய்க்காலுக்கு கடந்த மாதம் 135 நாள் தண்ணீர் திறந்துவிடுமாறு அரசு அறிவித்தும், 13 நாட்களுக்கு மட்டுமே தண்ணீர் விட்டனர். மீண்டும் 10 நாட்களுக்கு தண்ணீர் கேட்டும் தரவில்லை. 5 நாட்கள் மட்டுமே தண்ணீர் கொடுக்க முடியும் என தாராபுரம் பொதுப்பணித்துறை அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

இப்பிரச்னையில் கரூர் மாவட்டத்துக்கு தாராபுரம் பொதுப்பணித்துறை அதிகாரிகள் துரோகம் செய்கிறார்கள் என மனுவில் தெரிவித்துள்ளனர்.

இந்தப் பிரச்னையில் விரைவில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றார் மாவட்ட ஆட்சியர்.

**புகையிலைக்கு நிகரான மாற்றுப் பயிர்சாகுபடிக்கு அரசு உதவ வலியுறுத்தல்**

வேதாரண்யம் பகுதியில் மெல்லும் புகையிலை உற்பத்திக்கு நிகரான லாபம் தரக்கூடிய மாற்றுப் பயிர்களை சாகுபடி செய்திட விவசாயிகளுக்கு அரசு உதவ வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் வேதாரண்யம் ஒன்றியப் பேரவை கூட்டம் தகட்டூரில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

பேரவைக்கு சங்கத்தின் ஒன்றியத் தலைவர் வி.முருகையன் தலைமை வகித்தார்.

சங்கத்தின் நாகை மாவட்டச் செயலாளர் எஸ். சம்பந்தம், துணைத் தலைவர் எஸ். நாராயணசாமி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் ஒன்றியச் செயலாளர் சிவகுரு. பாண்டியன், கட்சியின் மாவட்டப் பொருளாளர் டி. நாராயணன் உள்ளிட்டோர் பங்கேற்று பேசினர்.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்: புகையிலை பொருள்களுக்கு அரசு தடை விதித்துள்ள நிலையில்,வேதாரண்யம் பகுதியில் உற்பத்தி செய்யப்படும் மெல்லும் புகையிலைக்கு நிகரான லாபம் தரக்கூடிய மாற்றுப் பயிர்களை கண்டறிந்து, உரிய தொழில்நுட்பத்துடன் சாகுபடி செய்திடவும், மானியம் போன்றவைகளை வழங்கி அரசு விவசாயிகளுக்கு உதவ வேண்டும்.

சம்பா சாகுபடிக்கு போதிய அளவு தண்ணீர் திறக்க வேண்டும் என்பன உள்ளிட்ட பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**பயிர் காப்பீடு செய்ய விவசாயிகளுக்கு அழைப்பு**

பயிர் காப்பீடு செய்ய காரைக்கால் விவசாயிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து காரைக்கால் கூடுதல் வேளாண் இயக்குநர் க. மதியழகன் திங்கள்கிழமை வெளியிட்ட செய்திக்குறிப்பு:

காரைக்கால் மாவட்டத்தில் நிகழாண்டில் சொந்த செலவில் சம்பா, தாளடி சாகுபடி செய்துள்ள அனைத்து விவசாயிகளும் டிசம்பர் 15-ம தேதிக்குள் பயிர் காப்பீடு பிரீமியத் தொகையை செலுத்தி பயிர் காப்பீடு செய்து கொள்ள வேண்டும்.

நடப்பு பருவத்தில் காரைக்கால் மாவட்டத்தில் நெற்பயிருக்கு ஒரு ஹெக்டேருக்கான சாதாரண காப்பீட்டுத் தொகை ரூ. 43,639. இந்த காப்பீட்டிற்கு பிரீமியத் தொகை, காப்பீட்டில் 2 சதவீதமான ரூ. 873 ஆகும். இந்த தொகையில் 50 சதவீதத்தை புதுச்சேரி அரசு செலுத்தும். மீதமுள்ள தொகையை சம்பந்தப்பட்ட விவசாயிகள் தாங்கள் கணக்கு வைத்துள்ள வங்கிக் கிளைகளில் நிலத்திற்கான ஆதாரத்துடன் செலுத்தி பதிவு செய்து கொள்ள வேண்டும். விருப்பத்தின் அடிப்படையில் கூடுதலாக 150 சதவீதம் வரை காப்பீடு செய்ய விவசாயிகள் கூடுதல் காப்பீட்டுத் தொகை ஒரு ஹெக்டேருக்கு ரூ. 29,091-க்கு பிரீமியமாக 18.5 சதவீதத் தொகையாக ரூ. 5,382 செலுத்த வேணடும். இந்த தொகையிலும் அரசு 50 சதவீதத்தை செலுத்தும்.

இதற்கான விண்ணப்பப் படிவங்கள் மற்றும் விவரங்களை சம்பந்தப்பட்ட உழவர் உதவியகங்களில் விவசாயிகள் பெற்றுக் கொள்ளலாம்.

**தண்ணீர் வழங்கக் கோரி விவசாயிகள் மறியல்**

திருவாரூர் அருகே கருகும் சம்பா பயிர்களை காப்பாற்ற தண்ணீர்விடக் கோரி, விவசாயிகள் திங்கள்கிழமை மறியலில் ஈடுபட்டனர்.

மாவட்டத்தில் 1.30 லட்சம் ஹெக்டேரில் சம்பா சாகுபடி நடைபெறும் நிலையில், தற்போது 2-ம் கட்ட பணிகளான களையெடுப்பு மற்றும் உரம் இடும் பணி நடைபெற்று வருகிறது.

கடந்த 10 நாள்களாக மாவட்டத்தில் பல இடங்களில் தண்ணீரின்றி சம்பா பயிர்கள் கருகுவதாகவும், 2-ம் கட்டப் பணிகளை தொடர்து மேற்கொள்ள முடியவில்லை என்று விவசாயிகள் பல்வேறு போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில், திருவாரூர் அருகே சோழங்கநல்லூர், சூரனூர் உள்ளிட்ட பகுதிகளில் சுமார் 3,000 ஏக்கர் விளைநிலங்களுக்கு பாசன வசதியைக் கொடுக்கும் தியாகராஜன்பேட்டை, தொம்பை வாய்க்காலில் கடந்த பல நாள்களாக தண்ணீர் வரவில்லையென்றும், இதனால் நேரடி மற்றும் நடவுப்பணி செய்த சம்பா பயிரைக் காப்பாற்ற முடியவில்லையென்றும், சாகுபடிக்கு உடனடியாக தண்ணீர் விடக்கோரி விவசாயிகள் திங்கள்கிழமை திருவாரூர்-நாகை சாலையில் சோழங்கநல்லூரில் மறியலில் ஈடுபட்டனர்.

பொதுப் பணித் துறையினர், வட்டாட்சியர் மற்றும் காவல் துறையினர் மறியலில் ஈடுபட்ட விவசாயிகளிடம் பேச்சுவார்த்தை நடத்தினர். தண்ணீர் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று அதிகாரிகள் அளித்த உறுதியின் பேரில், மறியல் விலக்கிக் கொள்ளப்பட்டது. மறியலால் அப்பகுதியில் 3 மணி நேரம் போக்குவரத்து,பாதிக்கப்பட்டது.

**மீன்வள பல்கலைக்கழகம் அமெரிக்க பல்கலை.யுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்**

மீன் உற்பத்தியைப் பெருக்கும் வகையில், அமெரிக்காவில் உள்ள ஆபர்ன் பல்கலைக்கழகத்துடன் தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகம் திங்கள்கிழமை புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது.

தமிழகத்தில் மீன்வளத்தைப் பெருக்கும் வகையில் நாகப்பட்டினத்தில் செயல்பட்டு வரும் தழிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகம் அமெரிக்காவில் உள்ள ஆபர்ன் பல்கலைக்கழகத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் ஈடுபட்டுள்ளது.

இந்த ஒப்பந்தம் கையெழுத்தாகும் நிகழ்ச்சி தூத்துக்குடி மீன்வளக் கல்லூரி ஆராய்ச்சி நிலையத்தில் திங்கள்கிழமை நடைபெற்றது. ஆபர்ன் பல்பலைக்கழகத்தைச் சேர்ந்த மீன்வளப் பிரிவு பேராசிரியர் வில்லியம் டேனியலும், தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழக துணைவேந்தர் பாஸ்கரன் மணிமாறன் ஆகியோர் ஒப்பந்தங்களை பரிமாறிக் கொண்டனர். தூத்துக்குடி மீன்வளக் கல்லூரியின் ஆராய்ச்சி மற்றும் விரிவாக்க இயக்குநர் கு.வெங்கடசாமி, கல்லூரி முதல்வர் (பொறுப்பு) கோ. சுகுமார் ஆகியோர் முன்னிலையில் ஒப்பந்தம் கையெழுத்தானது.

இதுகுறித்து தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழக துணைவேந்தர் பாஸ்கரன் மணிமாறன் கூறியது:

இந்த ஒப்பந்தத்தின் மூலம் இரு நாட்டுப் பல்கலைக்கழகங்களிடையே ஆராய்ச்சி, மாணவர் மற்றும் ஆசிரியர் பரிமாற்றம், இரட்டை பட்டம் வழங்குதல் மற்றும் மீன்வளர்ப்பு, மீன்பொருள் பாதுகாப்பு, கடல்பாசி வளர்ப்பு ஆகிய துறைகளில் இணைந்து செயல்பட வாய்ப்பு உள்ளது. மேலும், மீன் உற்பத்தியைப் பெருக்குவது தொடர்பாக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆலோசித்து முடிவு எடுப்போம் என்றார் அவர்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**08.10.2013**

## மறந்து போன மழை நீர் சேகரிப்பு : மரிக்கும் நிலையில் : விவசாயம் அபாய கட்டத்தில் நிலத்தடி நீர் மட்டம்

அள்ள... அள்ளக்குறையாதஅமுதசுரபியாய் இருக்கும் என எண்ணி, மழை நீர் சேகரிக்காமல், நிலத்தடிநீர் மட்டத்தை உறிஞ்சி தள்ளியதன் விளைவை உடுமலை பகுதி மக்கள் நாள்தோறும் அனுபவித்து வருகின்றனர். இரண்டு ஆண்டுகளாக பருவமழை கைவிட்டதால், நீராதாரங்கள் வற்றி, பரிதாப நிலையில் உள்ளன. இதனால், கற்பக விருட்சமான தென்னையை காப்பாற்ற விவசாயிகள் நிலத்தடி நீருக்காக போராடியும் பலனில்லை.
ஒவ்வொரு ஆண்டும், நிலத்தடி நீர் மட்டம் குறைந்து வருவது குறித்து அதிக அக்கறை காட்டாததன் விளைவு தற்போது கண்கூடாகத்தெரிகிறது. விளைநிலங்களில், 800 அடியில், அதிக நீர் கிடைத்து வந்த காலம் மலையேறி, தற்போது, 1,300 அடிக்கும் கீழ் நிலத்தடி நீர் மட்டம் சென்று விட்டது. பல ஆயிரம் ரூபாய் செலவிட்டு, ஆயிரம் அடி வரை போர்வெல் போட்டும், ஒரு சொட்டுத்தண்ணீர் கூட கிடைக்காத விவசாயிகளின் கண்ணீர் கதைகள் உடுமலை பகுதியில், அதிகரித்து வருகின்றன.

முப்போகம் நெல் விளையாவிட்டாலும், பணப்பயிர்களை பயிரிட்டு, பிற மாவட்ட விவசாயிகளுக்கு முன் உதாரணம் என பெயர் பெற்ற விவசாயிகள், தங்கள் கண் முன் 30 ஆண்டுகளுக்கும் மேலாக வளர்த்த தென்னை மரங்கள் கருகுவதை வேதனையுடன் பார்வையிட மட்டுமே முடிகிறது.

கிணறுகள் வற்றியதுடன், போர்வெல்களும் இயங்காத நிலைக்கு சென்றுள்ளதால், கிராமங்களில் குடிநீர் தட்டுப்பாடும் நிரந்தரமாகியுள்ளது. திருப்பூர் மாவட்டத்தில், நிலத்தடி நீர் மட்டம் அபாய நிலைக்கு சென்றுள்ளதாக குடிநீர் வடிகால் வாரியமும் எச்சரித்துள்ளது.

பி.ஏ.பி., அமராவதி என இரு பாசனத்திட்டங்கள், தென்மேற்கு மற்றும் வடகிழக்கு பருவமழை என பசுமையாக காட்சியளித்த உடுமலை பகுதி இன்று வறட்சிப்பகுதியாக மாறியுள்ளது.

இதற்கு, விஞ்ஞானிகள் தெரிவிக்கும் ஒரே காரணம் மழை நீர் சேகரிப்பு உடுமலை பகுதியில் போதிய அளவு இல்லை என்பதேயாகும். அதிக நிலத்தடி நீரை உறிஞ்சும் பகுதியாக இருக்கையில், அதற்கேற்ப மழை நீர் சேகரிப்பு இப்பகுதியில் இல்லை. குடியிருப்பு பகுதிகளில், மழை நீர் சேகரிப்பு கட்டமைப்புகள் கட்டாயப்படுத்தப்பட்ட போதும், அதிலும் பல்வேறு குறைபாடுகள் உள்ளன.

மழை நீரை சேகரிக்க பல ஆண்டுகளாக விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்ட போது, கண்டுகொள்ளாத மக்கள், தற்போது மழையே இல்லை; மழை நீரை சேகரிப்பது எப்படி என புலம்புகின்றனர்.

மழைநீர் சேகரிப்பு அவசியம்

கோவை மாவட்டம் பொள்ளாச்சி சுற்றுப்பகுதிகளில், விவசாயம் முக்கிய தொழிலாக உள்ளது. இப்பகுதியில், கடந்த 50 ஆண்டுகளுக்கு முன்பு விவசாயத்திற்கு தேவையான நீர் கிடைத்ததால், முன்னோர்களும் ஆர்வமுடன் அப்பணியில் ஈடுபட்டு வந்தனர்.

நல்ல விளைச்சல் கிடைக்க குறிப்பிட்ட நேரத்திற்கு பருவமழை பெய்தது; போதிய தண்ணீர் விளை பயிர்களுக்கு கிடைத்தது போன்றவை காரணமாக இருந்தது. கிராமங்களில் இருந்த குட்டை, ஏரிகள், சிறு ஓடைகள் ஆகியவை முறையாக பராமரிக்கப்பட்டு பாதுகாக்கப்பட்டு வந்தன. மழைக்காலங்களில் மலைப்பகுதிகளில் வரும் நீர் ஓடைகள் வழியாக குளம், குட்டைகளில்

தேக்கப்படும். இதன் மூலம் நிலத்தடி நீர்மட்டம் உயர்ந்து கிணறுகளும் வற்றாமல், இருக்க போதிய அளவிற்கு நீர் கிடைத்து வந்தது. விவசாயத்திற்கும் தேவையான நீர் கிடைத்து வந்ததால், விவசாய பயிர்கள் முறையாக சாகுபடி செய்யப்பட்டு வந்தது. காலப்போக்கில், குளம், குட்டைகள் முறையாக பராமரிப்பில்லாமல், கழிவுநீர் தேங்கும் குட்டைகளாக மாறியது. மரங்களும் அதிகளவு வெட்டப்பட்டதால், மழையும் பாதிக்கப்பட்டது. பொய்த்துப்போன பருவமழை, கடும் வறட்சி போன்றவற்றால், நிலத்தடி நீர்மட்டம் குறைந்ததுடன், விவசாய சாகுபடி பயிர்களும் முற்றிலும் பாதிக்கப்பட்டன. நீர் கிடைக்காமல் சாகுபடி செய்யப்பட்ட பயிர்களும் வாடின. அணைகளின் நீர்மட்டம் சரிந்ததால், குடிக்க கூட தண்ணீர் கிடைக்க அவதிப்படும் நிலை காணப்படுகிறது. இந்நிலையில், மழைக்காலங்களில், வீணாக ரோட்டில் சென்று கழிவு நீரில் கலக்கும் மழைநீர் சேகரித்தால், நிலத்தடி நீர்மட்டத்தை உயர்த்தலாம் என்பதால், அரசு மழை நீர் சேகரிப்பு அமைப்பை கட்டாயமாக்கியது.

கடந்த முறை அ.தி.மு.க., ஆட்சிக்கு வந்ததும் மழைநீர் சேகரிப்பு அமைப்பை கட்டாயமாக்கியது. வீடுகள் உள்ளிட்ட அனைத்து பகுதிகளிலும் மழை நீர் சேகரிப்பு அமைப்பை உருவாக்க வேண்டும் என உத்தரவிட்டது. அதன் பேரில், மழை நீர் சேகரிப்பு ஏற்படுத்தப்பட்டது.

பின் வந்த தி.மு.க., ஆட்சியில் மழை நீர் சேகரிப்பு திட்டத்திற்கு முழுமையான ஆதரவு அளிக்கவில்லை. இதனால், இந்த திட்டம் கிடப்பில் போடப்பட்டது. தற்போது மீண்டும் அ.தி.மு.க., அரசு பொறுப்பேற்றதும் மழை நீர்சேகரிப்பை கட்டாயமாக்கியுள்ளது.

இதுதேவையானதா; இதற்கு வேறு செலவு செய்வதா? என பலரும் வாக்குவாதத்தில் ஈடுபட்டாலும், இன்றைய சூழ்நிலையில் மழைநீர் சேகரிப்பு என்பது அவசியமானதாகும். இதனை செயல்படுத்தினால் நிலத்தடி நீர்மட்டம் உயர்வதுடன்; தண்ணீர் தட்டுப்பாடும் ஏற்படாத சூழ்நிலை ஏற்படும். எனவே,

மழைநீர் சேகரிப்பின் அவசியத்தை உணர்ந்து, இந்த திட்டத்தை வரவேற்றால், மழைநீர் சேகரிக்கப்படுவதுடன், நிலத்தடி நீர்மட்டத்தை உயர்த்த முடியும்.

நாராயணசாமி, உடுமலை

மழை நீர் சேகரிப்பு கட்டமைப்பு, குடியிருப்புகளில் கட்டாயமாக்கப்படுவதை போல, கிராமங்களிலும் புதுத்திட்டம் கொண்டு வர வேண்டும். மழை நீர் ஓடைகளை தூர்வாரி, குளம், குட்டைகளை மழை நீர் சேகரிப்பு மையங்களாக பயன்படுத்த வேண்டும். அதிக ஏக்கர் பரப்பில், விவசாயம் மேற்கொள்பவர்கள் தங்கள் விளைநிலங்களில் பண்ணைக்குட்டைகள் அமைப்பதை கட்டாயப்படுத்த வேண்டும். வேளாண்துறை மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் இணைந்து இப்பணியை மேற்கொள்ள வேண்டும்.

மணிகண்டன்,உடுமலை போர்வெல் மற்றும் கிணறு களிலிருந்து தண்ணீரை உறிஞ்சி, விற்பனை செய்பவர்கள் குறித்துகண்காணிப்பு மேற்கொள்ள வேண்டும். அரசு அலுவலகங்களில், மழை நீர் சேகரிப்பு கட்டமைப்பு பொதுமக்கள் விழிப்புணர்விற்காக உடனடியாக ஏற்படுத்த வேண்டும். நிலத்தடி நீர் மட்டத்தின் தற்போதைய நிலை குறித்து மக்கள் கூடும் இடங்களில், விழிப்புணர்வு பிரசாரம் மேற்கொண்டால் மட்டுமே மக்களுக்கு உண்மை நிலை புரியும்.

க.சக்திவேல் (வால்பாறை) வால்பாறை போன்ற மலைப்பிரதேசங்களில் கட்டப்பட்டுள்ள அணைகளால், இன்று நான்கு மாவட்ட விவசாயிகள் பயனடைந்து வருகின்றனர். வரும் காலத்தில் மக்களின் குடிநீர் பிரச்னைக்கு நிரந்தர தீர்வு காணும் வகையில், வீடுகள் தோறும் மழை நீர்சேகரிப்பு தொட்டி அமைக்க வேண்டும். இந்த திட்டம் முழுமையாக அமல்படுத்தப்படுகிறதா? என்பது குறித்து நகராட்சி அதிகாரிகள் அடிக்கடி ஆய்வு செய்ய வேண்டும். சண்முக சுந்தரம், செட்டிப்புதூர் இந்தியாவில் குடிப்பதற்கு தகுதியுள்ள நீரின் அளவு குறைந்து கொண்டே வருகிறது. இருக்கும் நீரையும் கழிவுகளை கொட்டி

மாசுப்படுத்தி வருகிறோம். அதனால், குடிநீரின் அளவினை உயர்த்தவும், பாதுக்காக்கவும் வேண்டிய கட்டாயத்தில் உள்ளோம். மரங்கள் வளர்ப்பு, நீர் ஆதாரங்களை முறையாக பராமரிப்பது, மழைநீர் சேகரிப்பு உள்ளிட்ட பல்வேறு முறைகளில் நீரினை பாதுகாக்க வேண்டும். இதில், அ.தி.மு.க., அரசு கொண்டு வந்த மழைநீர் சேகரிப்பு திட்டத்தினை, ஒவ்வொரு வீட்டிலும் முறையாக செய்யவேண்டும். இதனால், மழைக்காலத்தில் வீணாகும் நீரினை சேமிக்க முடியும். இதனால், நிலத்தடி நீர்மட்டத்தினை உயர்த்த முடியும். இதனை, அனைவரும் செய்ய முன்வர வேண்டும்.

கண்ணன், பொள்ளாச்சி மனிதனின் அடிப்படை தேவைகளுள் முதன்மையானது நீர். மனிதனின் சுயலாபத்துக்காக, இயற்கையை அழித்து வருவதால், மழைப்பொழிவின் அளவு குறைந்து கொண்டே வருகிறது. இதனால், விவசாயம் முதல் குடிநீர் வரையிலான அனைத்திலும் தண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. ஆறு, ஏரி, குளங்கள் அனைத்தையும் கழிவுநீர் வெளியேற்றும் இடமாக மாற்றி வருவதால், நீர் மாசுப்பட்டு
குடிப்பதற்கு தகுதியற்றதாக உள்ளது. அதனால், குடிநீரை சேமிக்கவும் பாதுகாக்கவும் வேண்டிய கட்டாயத்துக்கு தள்ளப்பட்டுள்ளோம்.நீரை சேமிக்கும் வழிகளில்
ஒன்றான மழைநீர் சேகரிப்பு முறை முதன்மையானதும் கூட. ஒவ்வொரு வீட்டிலும் மழைநீர் தொட்டி அமைத்து, மழைநீரை சேமித்தால் நிலத்தடி நீரின் மட்டம் உயரும்.

கார்த்திக், சென்னியூர் கிராமம் மற்றும் நகரம் என பேதமின்றி தண்ணீர் தட்டுப்பாடு அதிகரித்து வருகிறது. இதற்கு, முறையாக தண்ணீரை பாதுகாக்க தவறிவிட்டதே
முதற்காரணம். மழைப்பொழிவு ஆண்டுதோறும் குறைந்து கொண்டே வருகிறது. கிடைத்திடும் மழைப்பொழிவையும் முறையாக பயன்படுத்திக் கொள்ள, அதற்கான முன்னேற்பாடுகளை செய்து கொள்ள வேண்டும் தற்போதைய சூழ்நிலையில்

மழைநீர் சேகரிப்பு திட்டம் மிகவும் அவசியமானது. குடியிருப்பு வீடுகளில் மழைநீரை சேகரிக்க, மழைநீர் சேகரிப்புத்தொட்டி அமைத்து பராமரிக்க வேண்டும். இதனால், நிலத்தடி நீர்மட்டத்தினை உயர்த்திட முடியும். வீட்டுத்தேவைக்கு போடப்பட்டுள்ள போர்வெல்லின் லெவலும் குறைக்காமலும் இருக்கும்.

கிருஷ்ணகுமார், தாமரைக்குளம் மழைநீர் சேகரிப்பு திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதில், அ.தி.மு.க., அரசு முழுவீச்சாய் செயல்பட்டு வருகிறது. ஒவ்வொரு வீட்டிலும் மழைநீர் சேகரிப்பு தொட்டியினை அமைத்து, நிலத்தடி நீரின் மட்டத்தினை உயர்த்திடும் நோக்கத்தில் செய்யப்பட்டு வருகிறது. இதனால், பொதுமக்கள் அதிகாரிகளை ஏமாற்றாமல், முறையாக அரசு நிர்ணயித்துள்ள விதிகளின்படி மழைநீர் சேகரிப்பு தொட்டியினை அமைக்க வேண்டும். இதனால், வரும் தலைமுறையினருக்கு தண்ணீர் பிரச்சனை இல்லாமல் இருக்கும்.

## மாடுகளை காக்க அரசின் நடவடிக்கை தேவை :இயற்கை வேளாண் விஞ்ஞானி அறிவுறுத்தல்

திருப்பூர் : ""இறைச்சிக்காக மாடுகள் கடத்தப்படுவதை தடுத்து, நம் நாட்டின் பாரம்பரிய சொத்துக்களான மாடுகளை காக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்,'' என இயற்கை வேளாண் விஞ்ஞானி நம்மாழ்வார் கூறினார்.அவர், திருப்பூரில் நேற்று நிருபர்களிடம் கூறியதாவது:
நமது பாரம்பரியமிக்க சொத்து, மாடுகள்; நாம் கடவுளாக கொண்டாடுகிறோம்; மனிதர்களையும், மாடுகளையும் பிரிக்க முடியாது. வேளாண்மைக்கு உயிர் நாடியாக இருந்தது. தற்போதும், பால் இல்லாமல் உணவுகள் இல்லை; 43 சதவீத குழந்தைகளுக்கு பசும்பால் ஆதாரம். உணவு பொருள் உத்தரவாதம் அளிக்கும் அரசு, உணவின் பெரும்பங்காக உள்ள பால் உற்பத்தியை காக்கத் தவறி வருகிறது.சட்டங்கள் இருந்தாலும், லஞ்சம், ஊழல் காரணமாக, வெளிநாடுகளுக்கு இறைச்சிக்காக மாடுகள் கடத்தப்படுகின்றன. ஏழைகளுக்கு தமிழக அரசு

இலவசமாக வழங்கும் மாடுகள் கூட, இறைச்சிக்கு விற்கும் சம்பவங்கள் நடந்து வருகின்றன. வெளிநாடுகளில் ஒரு கிலோ இறைச்சி 600 ரூபாய்க்கு விற்கிறது. தோல், நரம்பு, கால் குழம்பு என அனைத்து பொருட்களும் பயன்படுகிறது. ஒரு மாட்டின் மதிப்பு பல லட்சம் ரூபாயாகும். ஆக்கிரமிப்புகளால் இன்று, கால்நடை வளர்ப்பு கிராமங்களில் கூட கேள்விக் குறியாகி உள்ளது. மாட்டு சாணம், தீங்கு விளைவிக்கும் கதிர்களிலிருந்து காக்கிறது. சாணம், கோமியம், மருந்து பொருளாகிறது. உடலுக்கு தீங்கு விளைவிக்காத சோப்பு, முகம் கழுவும் பவுடர் உள்ளிட்டவை மூலிகை பொருட்களுடன் சேர்த்து தயாரிக்கப்படுகிறது. சர்க்கரை நோயை குணப்படுத்தும் மருந்தாகவும் கோமியம் பயன்படுகிறது.சாணம் இருந்தால், மண்ணில் ஈரம் நிரந்தரமாக இருக்கும்; நுண்ணுயிர்கள் வளரும்; ரசாயண உரங்களால் மண் மலடாகி வருகிறது. பால், சாணம், கோமியத்திற்காவது மாடுகளை காக்க வேண்டும். நமது பாரம்பரிய மாடுகள் எந்த சீதோஷ்ண நிலையையும் தாங்கி வளரக் கூடியவை; அவற்றின் பாலும் புரதச்சத்து மிகுந்ததாகவும், தீங்கு விளைவிக்காது.இவ்வாறு, அவர் தெரிவித்தார்.

**மாசு கட்டுப்பாடு வாரிய செயல்பாடு...செத்து விட்டது! கலெக்டரிடம் குமுறிய விவசாயிகள்**

கரூர்: "கரூர் மாவட்டத்தில் மாசுக்கட்டுப்பாடு வாரியத்தின் செயல்பாடுகள் செத்துப்போய் விட்டது. இதனால், உங்களைத்தான் நம்பியுள்ளோம்' என, குறைதீர் கூட்டத்தில் மனு கொடுக்க வந்த விவசாயிகள் கலெக்டரிடம் குமுறினர்.

கரூர் மாவட்டம் அமராவதி ஆற்றில் சாயக்கழிவுகள் விடப்பட்டதால், பாதிப்படைந்த விவசாயிகளுக்கு உரிய நிவாரணம் தரக்கோரி, விவசாயிகள் கடந்த 10 ஆண்டாக பல்வேறு போராட்டங்களை நடத்தி வருகின்றனர்.

தொடர்ந்து கரூர் சுற்று வட்டார பகுதிகளில், இரவு நேரங்களில் சாயப்பட்டரைகளில் நூல்களுக்கு சாயம் போடும் பணிகள் நடப்பதால், அமராவதி

ஆற்றில் சாயக்கழிவு கலப்பதாக விவசாயிகள் தரப்பில் இருந்து புகார் எழுந்துள்ளது.
விவசாயிகள் தரப்பில் இருந்து செயல்படும் சாயப்பட்டரைகள் குறித்து புகார் தெரிவித்தால், கரூரில் செயல்படும் மாசுக்கட்டுப்பாடு வாரிய அதிகாரிகள் கண்டு கொள்வது இல்லை என விவசாயிகள், பலமுறை புகார் தெரிவித்து வருகின்றனர். சாயக்கழிவால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உரிய இழப்பீடும் கிடைக்காத நிலையில், தொடர்ந்து அமராவதி ஆற்றில் சாயக்கழிவுகள் கலக்கப்படுவதால், அதிர்ச்சியடைந்த நிலத்தடி நீர் பாதுகாப்பு மற்றும் சாயக்கழிவால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் சங்க தலைவர் ராமசாமி, செயலாளர் ராமலிங்கம் உள்ளிட்ட விவசாயிகள் நேற்று, கரூர் கலெக்டர் அலுவலகத்தில் நடந்த வாராந்திர மக்கள் குறைதீர் கூட்டத்துக்கு வந்தனர்.
கூட்ட அரங்கில் இருந்த கலெக்டர் ஜெயந்தியிடம் மனு கொடுத்த விவசாயிகள், சாயக்கழிவால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழக்கம் போல் நஷ்ட ஈடு பெற்றுத்தருதல், அமராவதி ஆற்றில் சாயக்கழிவை கலப்பதை தடுத்தல் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைளை வலியுறுத்தினர்.

அப்போது, உணர்ச்சி வசப்பட்ட சில விவசாயிகள், "கரூரில் மாசுக்கட்டுப்பாடு வாரியத்தின் செயல்பாடுகள் செத்து போய்விட்டது. மாசுக்கட்டுப்பாடு வாரிய அதிகாரிகள் மீது (எங்களுக்கு) நம்பிக்கை இல்லை. நீங்கள்தான் (கலெக்டர் ஜெயந்தி) விவசாயிகளை காப்பாற்ற வேண்டும்," என்றனர்.

இதனால், கூட்ட அரங்கில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. மனுவை பெற்றுக்கொண்ட கலெக்டர் ஜெயந்தி, ""உறுதியான உரிய நடவடிக்கை எடுக்கப்படும்," என, தெரிவித்தார்.
பிறகு, சாயக்கழிவால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் கூறியதாவது:

சாயக்கழிவால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு வழங்க தீர்ப்பு வழங்கப்பட்டு, 10 ஆண்டு ஆகிறது. ஆனால், முழுமையான இழப்பீடு வழங்கவில்லை. அமராவதி ஆற்றுப்பகுதிகளில் எடுக்கப்பட்ட மண் மாதிரி பரிசோதனையில், "விவசாயம்

செய்ய தகுந்த அளவில் மண் இல்லை' என, அரசு மண் பரிசோதனை நிலையம் மூலம் தெரியவந்துள்ளது.
கரூர் மாவட்டத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட தகுதியான விவசாயிகளுக்கும், அரவக்குறிச்சி, கிருஷ்ணராயபுரம் தென்னை விவசாயிகளுக்கும் உரிய நிவாரணம் வழங்க வேண்டும். கடைமடை பகுதிகளுக்கு தண்ணீர் சேரும் வகையில், அமராவதி அணையில் இருந்து கூடுதல் தண்ணீர் திறக்க வேண்டும். இரவு நேரங்களில் சாயமிடும் மற்றும் சலவை போடும் பட்டரை உரிமையாளர்களை கைது செய்ய வேண்டும், அமராவதி ஆற்றில் கழிவுகளை விடுவதை, கரூர் நகராட்சி நிர்வாகம் நிறுத்தி கொள்ள வேண்டும்.
வரும் எம்.பி., தேர்தலில் விவசாயிகளின் நலனை பாதுகாக்கும் வகையில், நிலத்தடிநீர் பாதுகாப்பு மற்றும் சாயக்கழிவால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் சங்கம் சார்பில் போட்டியிடுகிறோம். இதற்கான பிரச்சாரம் விரைவில் துவக்கப்பட உள்ளது. விவசாய சங்கம் சார்பில் போட்டியிடும் வேட்பாளருக்கு, பொதுமக்கள் ஆதரவு அளிக்க வேண்டும்.
இவ்வாறு அவர்கள் கூறினர்.

அப்போது, சங்க தலைவர் ராமசாமி, துணைத்தலைவர் அம்மை யப்பன், செயலாளர் ராமலிங்கம், நிர்வாகிகள் நல்லுசாமி, ராமலிங்கம் உட்பட விவசாயிகள் பலர் உடனிருந்தனர்.
ராஜவாய்க்கால் பாசன விவசாயிகளும் மனு:

திருப்பூர் மாவட்டம் உடுமலைபேட்டையில் உள்ள அமராவதி அணையில் இருந்து, தமிழக அரசின் உத்தரவின் கீழ் முறைப்படி பழைய ஆயக்கட்டு பகுதிகளுக்கு தண்ணீர் திறந்து விடக்கோரி, அமராவதி நதி நீர் ராஜவாய்க்கால் பாசன விவசாயிகளும் நேற்று கலெக்டர் ஜெயந்தியிடம் மனு கொடுத்தனர்.

**முருக்கம்பாடி கிராமத்தில் கால்நடைகளுக்கு தடுப்பூசி**

திருக்கோவிலூர் : மணலூர்பேட்டை கால்நடை பராமரிப்புத் துறை, அரிமா சங்கம் இணைந்து முருக்கம்பாடியில் கால் நடைகளுக்கு கோமாரி தடுப்பூசி

போடப்பட்டது.

மணலூர்பேட்டை கால்நடை பராமரிப்புத்துறை, அரிமா சங்கம் இணைந்த முருக்கம்பாடி, கொங்கணாமூர் உள்ளிட்ட கிராமங்களில் கோமாரிநோய் தடுப்பூசி போடும் சிறப்பு முகாம் நடந்தது. முருக்கம்பாடி ஊராட்சி தலைவர் கருணாகரன் வரவேற்று, முகாமை துவக்கி வைத்தார். அரிமாசங்க செயலாளர் குழந்தைவேலு முன்னிலை வகித்தார். கால்நடை மருத்துவர் நரேந்திரன் தலைமையிலான மருத்துவ குழுவினர் முகாமில் கலந்து கொண்ட 720 மாடுகளுக்கு கோமாரி தடுப்பூசிகளை போட்டனர்.

கால்நடை ஆய்வாளர் பிரேமலதா, உதவியாளர் தமிழ்ச்செல்வி, பொன்னி முகாம் ஏற்பாடுகளை செய்தனர். சளிப்பு விழா

**வெயிலால் வதங்கும் வேர்கடலை பயிர்கள்**

செஞ்சி : பருவ மழையால் செழித்திருந்த மானாவாரி வேர்க்கடலை பயிர்கள் வெயிலால் வதங்கி வருகின்றன.செஞ்சி தாலுகாவில் நெல், கரும்பு, வேர்க்கடலை பயிர்களை

அதிகளவில் பயிர் செய்கின்றனர்.

ஒவ்வொரு ஆண்டும் 20 ஆயிரம் ஏக்கர் அளவிற்கு மானாவாரி வேர்கடலை சாகுபடி நடக்கிறது. ஜூலை மாதம் இறுதியில் துவங்கி, ஆகஸ்ட் மாதம் மத்தியில் வரை மானாவாரி வேர்கடலை விதைப்பு நடக்கும்.

இந்த ஆண்டு பருவ மழை தாமதமாக பெய்ததால் வேர்கடலை விதைப்பும் தாமதமானது. விதைப்பு முடிந்த சில நாட்களில் பெய்த மழையால் பயிர்கள் நன்கு விளைந்தன. இது விவசாயிகளை உற்சாகத்தில் ஆழ்த்தி இருந்தது.

கடந்த 20 நாட்களாக மழை இல்லாமல், வெயில் சுட்டெரித்து வருகிறது. பூத்துக் குலுங்கிய வேர்க் கடலை பயிர்கள் வெப்பம் தாளாமல் வதங்கி வருகின்றன. சில நாட்களில் பருவ மழை பெய்தால் மட்டுமே பயிர்களை காப்பாற்ற முடியும். சில ஆண்டுகளாக மழையின் அளவு குறைந்து, நெல் உற்பத்தி பாதிக்கப்பட்ட

போதிலும், மானாவாரி வேர்க்கடலை விவசாயிகளுக்கு கை கொடுத்து வந்தது. இந்த ஆண்டு கோடையை போல் சுட்டெரிக்கும் வெயிலால் வேர்கடலை பயிர்கள் வதங்கி வருவது விவசாயிகளை கவலையடைய செய்துள்ளது.

**வேளாண் பணிகளை துவக்க முடியாமல் திண்டாட்டம் :நகரங்களில் வேலை தேடும் கிராம மக்கள்**

விழுப்புரம் : தென்மேற்கு பருவ மழை பொய்த்து வேளாண் பணிகள் துவங்க முடியாததால், கிராம மக்கள் விழுப்புரம் நகரத்திற்கு வேலை தேடி வருகின்றனர். தமிழகத்தின் பெரிய மாவட்டங்களில் ஒன்றான, விழுப்புரம் மாவட்டத்தில், 34 லட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் வசிக்கின்றனர்.

தொழிற்சாலை மிக குறைந்தளவு உள்ள, இம்மாவட்டத்தில் வேளாண் பணிகளே பிரதான தொழிலாக உள்ளது.

தமிழகத்தில் அன்றாட உணவு பொருட்களான அரிசி, பருப்பு வகைகள், எண்ணெய் வித்துகள், காய்கறிகள் உட்பட பல பொருட்கள் மாவட்டத்தில் விளைவிக்கப்படுகிறது. இதனால் இங்கிருந்து பல்வேறு வேளாண் பொருட்கள் வெளி மாவட்டங்களுக்கு அனுப்பப்படுகின்றன. தேவை குறைவு வேளாண் பணிகள் நிறைந்திருந்த மாவட்டத்தில், மூன்று ஆண்டுகளுக்கு மேலாக, ஆட்கள் பற்றாக் குறை, ரியல் எஸ்டேட் வளர்ச்சி போன்றவற்றால், வேளாண் பணிகள் குறைந்துள்ளது. பல பகுதிகளில் விவசாயிகள் கரும்பு, மா, கொய்யா, கிழங்கு மற்றும் சவுக்கு போன்ற நீண்ட கால பயிர்களை செய்ய துவங்கியுள்ளனர். இதனால் விவசாய பணிகளுக்கு ஆட்கள் தேவை குறைந்து, விவசாய கூலித் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்புகள் குறைந்துள்ளது.

மழை தாமதம் கடந்தாண்டு மாவட்டத்தில் போதிய அளவு மழை இல்லாமல் வறட்சி ஏற்பட்டது. இந்த ஆண்டும் தென் மேற்கு பருவமழை பொய்த்துள்ளது. தொடர் விவசாய பணிகள் மேற்கொள்ள முடியாமல் விவசாயிகள் பாதித்துள்ளனர்.இந்தாண்டு வட கிழக்கு பருவ மழையும் கால தாமதமாக துவங்கும்

என எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் கிராமப்புறங்களில் விவசாய பணிகள் கிடைக்காமல் ஆண்களும், பெண்களும் நகரங்களுக்கு வேலை தேடி வரும் நிலை அதிகரித்துள்ளது.கட்டட வேலைவிழுப்புரம் நகரைச் சுற்றியுள்ள 20 கி.மீ., தூரம் வரையுள்ள, கிராமங்களை சேர்ந்த ஆண்களும், பெண்களும் கட்டட வேலைக்கும் வந்து செல்கின்றனர். விழுப்புரம் கே.கே.ரோடு முனையில் தினம் காலை 7 மணி முதல் 9 மணி வரை 500க்கும் மேற்பட்டவர்கள் கூலி வேலைக்காக காத்து நிற்கின்றனர். இங்கு கட்டட வேலைக்கு ஆண்களுக்கு 400 ரூபாயும், பெண்களுக்கு 250 ரூபாயும் கூலியாக வழங்கப்படுகின்றன. கிராமங்களிலிருந்து பஸ் பிடித்து வேலைக்கு வரும் பலருக்கு, தொடர்ந்து வேலை கிடைக்காமல் பலர் திரும்பிச் செல்லும் பரிதாப நிலையும் உள்ளது. அதிகரிப்பு துவக்கத்தில் குறைந்த எண்ணிக்கையில் நகரத்திற்கு வேலை தேடி வந்தனர். இதன் எண்ணிக்கை தற்போது பல மடங்காக உயர்ந்துள்ளது. கிராமங்களில் வேளாண் பணிகள் இல்லாத போது, தேசிய ஊரக வேலை வாய்ப்பு திட்டத்தின் கீழ் பணிகள் வழங்க வேண்டும்.

வேளாண் பணிகள் அதிகம் நடக்கும் போது, தேசிய ஊரக வேலை வாய்ப்பு திட்டத்தை தவிர்த்து, வேளாண் பணிகளில் ஈடுபட வைத்தால், விவசாய பணிகள் செழிக்கும்.

**10 ஆயிரம் மரக்கன்றுகள் நட விழுப்புரம் ரோட்டரி ஏற்பாடு**

விழுப்புரம் : விழுப்புரம் நகரில் ரோட்டரி சங்கம் சார்பில் 10 ஆயிரம் மரக்கன்றுகள் நட திட்டமிடப்பட்டுள்ளது.
விழுப்புரம் ரோட்டரி சங்க தலைவர் ஆறுமுகம் கூறியதாவது:

விழுப்புரம் நகரை சுத்தமாக்கவும், பசுமையாக்கவும் ரோட்டரி சங்கம் திட்டமிட்டுள்ளது. இதன்படி விழுப்புரம் அரசு பொறியியல் கல்லூரி, நகராட்சி 41வது வார்டு வி.கே.எஸ். லட்சுமி நகர் ஆகிய பகுதிகளில் 600 மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளது. காணை, கண்டாச்சிபுரத்தில் மரக்கன்றுகள் நடும் நிகழ்ச்சி நடத்த

ஏற்பாடு செய்துள்ளோம்.
விழுப்புரம் நகரில் ஓராண்டு காலத்தில் 10 ஆயி ரம் மரக்கன்றுகள் நடப்படும். குடியிருப்பு நல சங்கத் தினர் மற்றும் பொதுநல அமைப்பினர், மரக்கன்றுகள் நடுவதற்கு ரோட் டரி சங்கத்தை தொடர்பு கொள்ளலாம். இலவசமாக மரக்கன்றுகள் தர தயாராக உள்ளோம்.
இவ்வாறு ரோட்டரி தலைவர் ஆறுமுகம் தெரிவித்தார்.

சங்க செயலாளர் சிதம்பரநாதன், மாவட்ட பொறுப் பாளர் ராமகிருஷ்ணன், விழுப்புரத்தை சுத்தம் மற்றும் பசுமையாக்கும் திட்டத்தின் தலைவர் ராமமூர்த்தி உடனிருந்தனர்.

**மழைநீர் சேகரிப்பு தொட்டியில் குப்பை கொட்டும் அவலம்**

மயிலம் : மயிலம் வட்டார வளர்ச்சி கூட்ட அரங்கிற்கு அருகில் உள்ள மழை நீர் சேகரிப்பு தொட்டியின் சிமென்ட் சிலாப்கள் உடைந்துள்ளது. இதை சாதகமாக பயன்படுத்தி குப்பைகளை வீசுகின்றனர். கூட்ட அரங்கில் துர்நாற்றம் வீசுகிறது. வெளியூர்களிலிருந்து பைக்குகளில் வரும் பொது மக்கள் விழுந்து விபத்து ஏற்படும் அபாய நிலை உள்ளது. கிராமங்களில் கட்டப்டும் பசுமை வீடுகள், தானே புயல் வீடுகளிலும், மற்ற குடியிருப்புகளிலும் அவசியம் மழை நீர் தொட்டிகள் கட்ட வேண்டும் என ஒன்றிய அதிகாரிகள் உத்தரவிடுகின்றனர். மயிலம் ஒன்றிய அலுவலகத்தில் மழைநீர் சேகரிப்பு தொட்டியை குப்பை தொட்டியாக மாற்றியதால் பொது மக்கள் முகம் சுளிக்கின்றனர்.

**பாமாயில் சாகுபடி செய்ய மயிலம் விவசாயிகள் ஆர்வம்**

மயிலம் : மயிலம் பகுதியில் பாமாயில் சாகுபடி செய்ய விவசாயிகள் ஆர்வமாக உள்ளனர்.
மயிலம், மரக்காணம், ஒலக்கூர் பகுதிகளில் விவ சாயிகள் பாமாயில் சாகுபடி செய்து வருகின்றனர். மத்திய, மாநில அரசுகள் சார்பில் விவசாயிகளுக்கு மரக்கன்றுகள் இலவசமாக வழங்கப்படுகிறது. பாமாயில் நடவு செய்ததிலிருந்து 3 ஆண்டுகளுக்கு உரம் மானியத்தில் வழங்கப்படுகிறது. சொட்டுநீர் பாசனம்

அமைக்க முழு மானியத்தில் உபகரணங்கள் வழங்கப்படுகிறது. ஊடுபயிர் செய்ய 50 சதவீதம் மானியத்தில் விதைகள் வழங்கப்படுகிறது. பாமாயில் செடிகள் நடவு செய்த 3 ஆண்டுகளிலிருந்து அறுவடைக்கு தயாராகிறது. இந்த மரம் 25 ஆண்டுகள் பலன் தரும். 3 ஆண்டுகளுக்கு பிறகு ஏக்கருக்கு 5 டன் அளவிற்கு மகசூல் கிடைக்கிறது. ஒரு டன் பாமாயில் பழம் ரூபாய் 6,500 ரூபாய் வரை விலை கிடைக்கிறது. 6ம் ஆண்டிலிருந்து 20 டன் வரையில் மகசூல் கிடைக்கிறது. ஏக்கருக்கு ஒரு லட்சத்திற்கு மேல் ஆண்டு வருமானம் கிடைக்கிறது.

விவசாயிகளுக்கு குறைந்த நீர், வேலை ஆட்கள் அதிகம் தேவையில்லை, பயிர் பாதுகாப்பு செலவும் மிக குறைந்த அளவு ஆகிறது.

அரியலூர் மாவட்டத்தில் வாரனவாசியை தலை மையிடமாக கொண்டு செயல்படும் கோத்ரேஜ் பாமாயில் நிறுவனம் திண்டிவனம் தாலுக்காவில் விளையும் பழங்களை கூட்டேரிப்பட்டில் கொள் முதல் செய்து பணம் வழங்குகின்றனர். விவசாய விளை பொருட்களை சந்தைக்கு எடுத்து சென்றாலும் இடைத் தரகர்கள் தொல்லைகள் உள்ளது. இதனால் விவசாயிகள் தற்போது பாமாயில் பயிரிடுவதில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

**மழையின்றி பயிரிட முடியாமல் தவிப்பு**

சின்னசேலம் : சின்னசேலத்தில் மழை பெய்யாததால், நெல்பயிரிட முடியாமல் விவசாயிகள் தவித்து வருகின்றனர்.சின்னசேலம் தாலுகாவில் தொட்டியம், கடத்தூர், கூகையூர், பெத்தானுர், ராயர்பாளையம் உள்ளிட்ட 85 கிராமங்கள் உள்ளன. அனைத்து கிராமங்களிலும் விவசாயத்தை முக்கிய தொழிலாக செய்து வருகின்றனர்.

நெல் பயிரிடுவதற்கு முன் பசுந்தாள் உரமான சனைப்பை பயிரை விதைத்துள்ளனர். 50 நாள் பயிரான சனைப்பையை கடந்த ஆகஸ்ட் மாதம் விதைத்தனர். சனைப்பை நன்கு வளர்ந்துள்ளது. பருவ மழை தள்ளிப்போவதால் விவசாயிகள் நெல் பயிரிட முடியாமல் தவித்து வருகின்றனர்.

இதனால் சனைப்பை வளர்ந்து இலை உதிர்ந்து விழும் நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் பயிருக்கு தேவையான உரசத்துகள் கிடைக்காத நிலை உருவாகியுள்ளது.?சின்னசேலம் பகுதியில் சனைப்பை பயிர் செய்துள்ள விவசாயிகள் நெல் பயிரிட முடியாமல் மிகுந்த கவலை அடைந்துள்ளனர்.

**பங்காரம் பகுதியில் பதியம் கரும்பு சாகுபடி**

கள்ளக்குறிச்சி : கள்ளக்குறிச்சி அடுத்த பங்காரம் பகுதியில் பதியம் கரும்பு சாகுபடி செய்வதில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர். கள்ளக்குறிச்சி பகுதியில் சில நாட்களாக மழை பெய்து வருகிறது. தற்போது நிலத்தடி நீர்மட்டம் வெகுவாக உயர்ந்துள்ளது.

கிணற்று நீர் பாசனத்தை நம்பி கரும்பு, மஞ்சள், மரவள்ளி உள்ளிட்ட பல பயிர்களை விவசாயிகள் சாகுபடி செய்கின்றனர். கள்ளக்குறிச்சி சுற்று வட்டார பகுதியில் மூன்று சர்க்கரை ஆலைகள் உள்ளதால் பல ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் கரும்பு சாகுபடி செய்யப்படுகிறது. செம்மை கரும்பு சாகுபடியான நாற்று முறையிலும் விவசாயிகள் அதிகளவு பயிரிட்டுள்ளனர். அதற்கேற்றார் போல் பதியம் கரும்பு முறையிலும் பயிர் செய்யப்படுகிறது. கள்ளக்குறிச்சி அடுத்த பங்காரம் பகுதியில் கிணற்று நீர் பாசனத்தை நம்பி பதியம் கரும்பு பயிர் செய்வதில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர். இம்முறையில் சாகுபடி செய்தால் ஒரு குறிப்பிட்ட வளர்ச்சிக்கு பின்பு வெட்டி எடுத்து செல்லலாம் என்று விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

**விவசாயிகள் கரும்பு வழங்குவதில் பாகப்பிரிவினை கலெக்டர் ஆஃபீஸில் கருத்து கேட்பு கூட்டம்**

சேலம்: தனியார் மற்றும் கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கு, விவசாயிகள் கரும்பு வழங்குவதில் ஏற்பட்டுள்ள பிரச்னையை களைய, சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டதால், கலெக்டர் அலுவலகத்தில் கருத்து கேட்பு கூட்டம் நடந்தது. சேலம், நாமக்கல், தர்மபுரி, திருவண்ணாமலை, பெரம்பலூர் பகுதிக்கு உட்பட்டு, 10,000 கரும்பு விவசாயிகள் உள்ளனர். இவர்களில், 5,000 பேர், மோகனூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை, அரூர் சுப்ரமணியசிவா கூட்டுறவு சர்க்கரை ஆலை,

தி.மலை பண்ணாரி சர்க்கரை ஆலை, பெரம்பலூர் தனலட்சுமி சீனிவாசன் சர்க்கரை ஆலைக்கு, அரவைக்காக கரும்பு வழங்குகின்றனர். சர்க்கரை ஆலைகளுக்கு, கரும்பு வழங்குவதில் விவசாயிகளுக்கு இடையே மோதல் போக்கு உருவானது. அருகில் உள்ள ஆலையை விட்டு, தொலைதூரத்தில் உள்ள ஆலைக்கு கரும்பை எடுத்து செல்ல அதிகாரிகள் அறிவுறுத்துவதால், விவசாயிகளுக்கு உரிய லாபம் கிடைப்பதில்லை. தனியார் ஆலைகள், விவசாயிகளுக்கு உரிய சலுகைகளை வழங்குகின்றனர். கூட்டுறவு ஆலைகளில் அவற்றை எதிர்பார்க்க முடியவில்லை.

கரும்பு வழங்குவதில் பாகப்பிரிவினை செய்ய வேண்டும் என விவசாயிகள் தரப்பில், சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. வழக்கை விசாரித்த நீதிமன்றம், சர்க்கரை இயக்குனர் பேச்சு நடத்தி, விவசாயிகளிடம் கருத்து கேட்க வேண்டும் என அறிவுறுத்தியது. அதனடிப்படையில், சேலம் கலெக்டர் அலுவலகத்தில், கரும்பு விவசாயிகள் பங்கேற்ற கருத்துக் கேட்பு கூட்டம் நடத்தப்பட்டது.

ஏற்காடு இடைத்தேர்தல் அறிவிப்பு வெளியிட்டுள்ளதால், சென்னை உயர்நீதிமன்றம், கூட்டம் நடத்துவதற்கு சிறப்பு அனுமதியை வழங்கியது. சர்க்கரைத்துறை இயக்குனர் மகேசன்காசிராஜன் தலைமை வகித்தார். மோகனூர் சர்க்கரை ஆலை தனி அலுவலர் மலர்விழி மற்றும் தனியார் ஆலை நிர்வாகிகள் பங்கேற்றனர்.

ஆயிரத்துக்கும் மேற்பட்ட விவசாயிகள், தாங்கள் விரும்பும் சர்க்கரை ஆலையில் கரும்பு விநியோகிக்க அனுமதிகோரி மனு அளித்தனர். உயர்நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்ட பின், கரும்பு வழங்கும் ஆலைகள் என்னென்ன என்பது பற்றி விவசாயிகளுக்கு தெரிவிக்கப்படும் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

**வாழைத்தார் வரத்து குறைவால் விலை அதிகரிப்பு**

ப.வேலூர்: ஆயுதபூஜைக்கு சில நாட்களே உள்ள நிலையில், வாழைத்தார் வரத்து குறைந்துள்ளதால், விலை தாறுமாறாக உயர்ந்துள்ளது.

நாமக்கல் மாவட்டத்தில், ப.வேலூர் காவிரி கரையோரப் பகுதிகளில், விவசாயிகள், அதிக அளவில் வாழை சாகுபடி செய்துள்ளனர். ப.வேலூரை சுற்றியுள்ள பரமத்தி, பாண்டமங்கலம், பொத்தனூர், நன்செய் இடையாறு, ப.வேலூர், பொய்யேரி ஆகிய பகுதிகளில், 5,000க்கும் மேற்பட்ட ஏக்கரில் வாழை சாகுபடி செய்யப்பட்டுள்ளது.
இப்பகுதியில் சாகுபடியாகும் வாழைத்தார்கள், சேலம், கோவை, ஈரோடு, கரூர் உள்ளிட்ட மாவட்டங்களுக்கு சப்ளை செய்யப்படுகிறது. தினமும், ப.வேலூர் வாழைத்தார் மார்கெட்டுக்கு, விவசாயிகள் கொண்டு வரும் வாழைத்தார்கள், ஏலம் விடப்பட்டு வெளி மாவட்ட, மாநில வியாபாரிகள் வாங்கிச் செல்கின்றனர்.

இந்நிலையில், கடந்த வாரத்தை விட, நேற்று கடுமையாக வாழைத்தார் விலை ஏற்றம் அடைந்தது. ஆயுத பூஜை இன்னும் சில நாட்களே உள்ளதால், விலை உயரும் என்ற நம்பிக்கையில், விவசாயிகள் வாழைத்தார்களை வெட்டாமல் உள்ளனர். அதனால், நேற்றைய மார்க்கெட்டில், வாழைத்தார் விலை தாறுமாறாக உயர்ந்தது.
பூவன், 300ல் இருந்து, 500க்கும், ரஸ்தாளி, 200ல் இருந்து, 400க்கும், பச்சநாடன், 200ல் இருந்து, 300க்கும், மொந்தன் ஒரு காய் ஆறில் இருந்து, ஒன்பது ரூபாய் விற்பனை செய்யப்பட்டது.
வாழைத்தார் வியாபாரி தேன்மணி கூறியதாவது:

ஆயுத பூஜைக்கு, இரண்டு நாட்களுக்கு முன், வாழைத்தார் ஏலத்துக்கு கொண்டு வந்தால் தான், அதிக விலைக்கு போகும் என்ற நம்பிக்கையில், விவசாயிகள் நேற்று, மார்கெட்டுக்கு வாழைத்தார் கொண்டு வரவில்லை. வெட்ட வேண்டிய கட்டாயத்தில் உள்ள வாழைத்தார்களை மட்டுமே, ஏலத்திற்கு கொண்டு வந்தனர். வழக்கமாக, 2,000 வாழைத்தார் வரவேண்டியது, நேற்று, 300 வாழைத்தார் மட்டுமே வந்தது. குறைவான வாழைத்தார் வரத்து இருந்ததால், விலை

தாறுமாறாக உயர்ந்தது. ஆயுத பூஜைக்குள், இன்னும் வாழைத்தார் விலை உயரும். இவ்வாறு அவர் கூறினார்.

**விவசாயிகள் சங்க புதிய கிளை துவக்கம்**

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி அடுத்த மகாதேவகொல்லஅள்ளியில், தமிழக விவசாயிகள் சங்க புதிய கிளை துவக்க விழா நடந்தது.

ஒன்றிய செயலாளர் கண்ணன் தலைமை வகித்தார். நர்சரி பண்ணையாளர் சங்க தலைவர் கண்ணையன், சின்னதம்பி, மாரியப்பன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கிளை தலைவர் செல்வராஜ் வரவேற்றார். மாநில பொது செயலாளர் ராமகவுண்டர் தீமானங்கள் குறித்து பேசினார்.

"கிருஷ்ணகிரி மாவட்டத்தில் வறட்சியால் காய்ந்து போன மா மரங்களுக்கு மரம் ஒன்றுக்கு, 5 ஆயிரம் ரூபாய் இழப்பீடு வழங்க வேண்டும். ஆயில் இன்ஜின் வைத்து விவசாயம் செய்யும் விவசாயிகளுக்கு மானிய விலையில் டீஸல் வழங்கி அவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் மின் இணைப்பு வழங்க வேண்டும்' உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றினர். ஒருங்கிணைந்த மாவட்ட பொது செயலாளர் சுந்தரேசன், மகளிர் அணி செயலாளர் பெருமா, கிருஷ்ணகிரி மாவட்ட தலைவர் தேவேந்திரன், செயலாளர் திருப்பதி, மாவட்ட துணை செயலாளர்கள் வேலு, ராஜா உட்பட பலர் கலந்து கொண்டனர். ராஜா நன்றி கூறினார்.

**ஊடு பயிரில் ஆர்வம்**

மஞ்சூர் : தேயிலை தோட்டங்களில் ஊடு பயிர் செய்ய விவசாயிகள் ஆர்வம் காட்டுகின்றனர். மஞ்சூர் சுற்றுவட்டார பகுதிகளான கீழ் கைக்காட்டி, தேவர்சோலை, காத்தாடி மட்டம், காசோலை உள்ளிட்ட பகுதிகளில் பல ஏக்கரில் தேயிலை தோட்டம் நடுவே உருளை கிழங்கு, பீட்ரூட், காரட் உள்ளிட்ட மலை காய்கறிகள் பயிரிடப்பட்டுள்ளது. ஒருபுறம் தேயிலை விவசாயம் மேற்கொள்ளப் பட்டாலும், விவசாயிகள் தேயிலை தோட்டங்கள் நடுவே ஊடு பயிர் செய்ய

ஆர்வம் காட்டுவது அதிகரித்து வருகிறது. விவசாயத்தை ஊக்குவிக்கும் வகையில் வங்கிகள் விவசாயிகளுக்கு குறிப்பிட்ட காலங்களில் பயிர் கடன் வழங்கினால், விவசாயம் மேற்கொள்ள ஏதுவாக இருக்கும் என விவசாயிகள் கருது கின்றனர்.

**ஏலம் விடுவதில் திடீர் சர்ச்சை :தேயிலை தோட்டத்தை**

குன்னூர் : குன்னூரில், வருவாய் துறை கட்டுப்பாட்டில் உள்ள தேயிலை தோட்டத்தை ஏலம் விடுவதில், திடீர் சர்ச்சை கிளம்பியுள்ளது.

குன்னூர் ஸ்டேன்லிபார்க் - வசம்பள்ளம் இடையே வருவாய் துறைக்கு சொந்தமான, இரண்டரை ஏக்கர் தேயிலை தோட்டம் உள்ளது. இத்தோட்டத்தை பராமரித்து, பசுந்தேயிலை பறிக்கும் உரிமம், கடந்த 2002ல், முன்னாள் ராணுவ வீரர் ஒருவருக்கு, குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டது. அக்கால கட்டத்தில், தோட்டத்தில் இருந்த மரங்கள் அனுமதியின்றி வெட்டப்பட்டதாக எழுந்த புகாரை தொடர்ந்து, குத்தகை ரத்து செய்யப்பட்டு, வழக்கும் தொடரப்பட்டது.

பின், கடந்த 2008 -2011 கால கட்டத்தில், ரத்னம் என்ற விதவை பெண்ணுக்கு குத்தகை அடிப்படையில், தோட்டத்தை பராமரிக்கும் உரிமம் வழங்கப்பட்டது. கடந்த 2011க்கு பின், வருவாய் துறையினரே அந்த தேயிலை தோட்டத்தை பராமரித்து வந்தனர். இந்நிலையில், அந்த தேயிலை தோட்டத்தில், பழைய குத்தகைதாரரே, பசுந்தேயிலை பறிக்க ஆட்களை அனுப்பியுள்ளார்.

இதுகுறித்து, ரத்னம் என்பவர் குன்னூர் தாசில்தாருக்கு அனுப்பிய மனுவில்,""பாழடைந்து கிடந்த தோட்டத்தை சீரமைத்து, பசுந்தேயிலை பறித்து, வருவாய் துறைக்கு தொகை செலுத்தி வந்தேன். குத்தகை காலம் முடிந்த நிலையில், மீண்டும் தோட்டத்தை ஏலம் விடும் போது எனக்கு தகவல் அளிப்பதாக வருவாய் துறையினர் கூறினர். ஆனால், ஏலம் குறித்த எந்த அறிவிப்பும் வரவில்லை; எனக்கு செலுத்த வேண்டிய முன்பணத்தை கூட செலுத்தாத நிலையில், பழைய குத்தகைதாரரே தோட்டத்தில் பசுந்தேயிலை பறிக்கிறார்," என கூறியிருந்தார்.

இப்பிரச்னை தொடர்பாக, குன்னூர் தாசில்தார் பால்ராஜிடம் கேட்ட போது,""சம்மந்தப்பட்ட தோட்டம் தொடர்பான சர்ச்சை குறித்து கிராம நிர்வாக அலுவலரை விசாரிக்க சொல்லியுள்ளேன்; தோட்ட குத்தகை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது; தோட்டத்தில் இலை பறிக்க தடை விதிக்கப்பட்டுள்ளது," என்றார்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**08.10.2013**

## எரிப்பூச்சியால் பாதித்த 8288 தென்னை மரங்களுக்கு மருந்து தெளிப்பு ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு திட்டத்தில் நடவடிக்கை

கிருஷ்ணகிரி,: கிருஷ்ணகிரி மாவட்டம் அரசம்பட்டி பகுதியில் எரிப்பூச்சியால் பாதிக்கப்பட்ட 8288 தென்னை மரங்களுக்கு ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு மூலம் மருந்து தெளிக்கப்பட்டது.

கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டணம் ஒன்றியம் அரசம்பட்டி அருகே உள்ள பென்றஅள்ளி மற்றும் மஞ்சமேடு கிராமங்களில் சுமார் 250 ஏக்கர் பரப்பளவில் பயிரிடப்பட்டுள்ள தென்னை மரங்களில் 8288 தென்னை மரங்கள் நத்தைப் புழுக்கள் (எரிப்பூச்சிகள்) எனும் புதிய வகை புழுக்களின் தாக்குதலால் பாதிக்கப்பட்டுள்ளது.

இந்த புழுக்கள் பச்சை கலந்த மஞ்சள் நிறம், வெள்ளை கோடுகளுடன் 4 வரிசை ரோமங்களுடன், ரோமங்களின் நுனி சிவப்பு அல்லது கருப்பு நிறுத்துடன் காணப்படும். இந்த நத்தைப் புழுக்கள் தென்னை ஓலைகளை சுரண்டியும், கடித்தும் சாப்பிட்டு மிகபெரிய சேதத்தை உருவாக்கி, இதன் மூலம் மரங்கள் காய்ந்து காணப்படுகிறது. இதனால் பச்சையம் முழுவதும் சுரண்டப்பட்டு மரத்தின் வளர்ச்சி குன்றி, விளைச்சல் முழுவதும் பாதிக்கும் அபாயநிலை ஏற்பட்டுள்ளது.

இதை தடுக்க வேளாண்மை துறையை சேர்ந்த அதிகாரிகள் கொண்ட குழு கடந்த மாதம் 16ம் தேதி அரசம்பட்டியில் முகாமிட்டு, பாதிப்பிற்குள்ளாகியுள்ள தென்னந்தோப்புகளில் ஆய்வு செய்தனர்.

அப்போது, நத்தைப் புழுக்களை கட்டுப்படுத்த மருந்துகள் சிபாரிசு செய்து ஆலோசனைகளை வழங்கினர். அத்துடன் தென்னை விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த குறிப்புகள் அடங்கிய நோட்டீஸ்கள் வழங்கப்பட்டது.

இந்நிலையில் நேற்று கிருஷ்ணகிரி மாவட்ட கலெக்டர் ராஜேஷ் முன்னிலையில், மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் ராதாகிருஷ்ணன், மாவட்ட கலெக்டரின்

நேர்முக உதவியாளர் (வேளாண்மை) சுமதி, காவேரிப்பட்டணம் வேளாண்மை உதவி இயக்குநர் ராஜேந்திரன், வேளாண்மை உதவி இயக்குநர் (தரக்கட்டுப்பாடு) பச்சையப்பன், பையூர் மண்டல ஆராய்ச்சி நிலைய தலைவர் புத்தர், வேளாண்மை உதவி அலுவலர்கள் மனோகரன், தனசேகர், அட்மா திட்ட அலுவலர் துரைசாமி மற்றும் கிராம நிர்வாக அலுவலர்கள் அனைவரும் பங்கேற்று, 250 ஏக்கர் பரப்பளவில் உள்ள சுமார் 8 ஆயிரத்திற்கும் அதிகமான தென்னை மரங்களுக்கு 5 டிராக்டர்கள் மூலம் ஒருங்கிணைந்த பயிர்பாதுகாப்பு அடிப்படையில் மவுண்டட் தெளிப்பானை கொண்டு மரங்களுக்கு மருந்து தெளித்தனர்.

அப்போது விவசாயிகளிடம் பேசிய அதிகாரிகள், தென்னந்தோப்புகளை உழவு செய்து சுத்தமாக வைத்திருக்க வேண்டும். ஊடுபயிராக கொள்ளுபயிர், தக்கப்பூண்டு, கொளுஞ்சி போன்ற பயிர்கள் பயிரிட வேண்டும். ஆண்டுக்கு இரண்டு முறை அரைவட்டப் பாத்தியின் மூலம் உரம் இடவேண்டும். அளவுக்கு அதிகமான தண்ணீரை வெளியேற்ற வடிகால் வசதி செய்திட வேண்டும். இவ்வாறு செய்வதால் இதுபோன்ற பாதிப்புகளை பெருமளவில் குறைக்கலாம் என்றனர்.

**அதிக விலை கிடைப்பதால் தர்மபுரி அங்காடிக்கு கொண்டு வர பட்டுக்கூடு விவசாயிகள் ஆர்வம்**

சேலம், நாமக்கல் விவசாயிகள் குவிகின்றனர்

தர்மபுரி: தமிழகத்தில் பட்டுக்கூடு பரிவர்த்தனையில் தர்மபுரி பட்டுக்கூடு அங்காடி முதன்மையாக உள்ளது. தர்மபுரி மாவட்ட பட்டுக்கூடு விற்பனை அங்காடிக்கு விழுப்புரம், கன்னியாகுமரி, நாமக்கல், சேலம், கிருஷ்ணகிரி, ஈரோடு உள்ளிட்ட மாவட்டங்களில் இருந்து தினசரி சுமார் 60 முதல் 70 பட்டு விவசாயிகளும் 25 முதல் 30 பட்டு நூற்பாளர்களும் வந்து பட்டுக்கூடு பரிவர்த்தனையில் கலந்து கொள்கின்றனர். தினசரி 2 ஆயிரம் முதல் 3 ஆயிரம் கிலோ பட்டுக்கூடுகள் பரிமாற்றம் செய்யப்படுகிறது. தர்மபுரி மாவட்டத்தில் உள்ள தர்மபுரி, பென்னாகரம், பாலக்கோடு ஆகிய பட்டுக்கூடு அங்காடிகளில் ஆண்டுக்கு ரூ.15 கோடி மதிப்பில் பட்டுக்கூடுகள் பரிவர்த்தனை செய்யப்படுகிறது.

இது குறித்து அதிகாரிகள் கூறியதாவது:

தர்மபுரி பட்டுக்கூடு அங்காடிக்கு தர்மபுரி கிருஷ்ணகிரி, ஈரோடு மாவட்டங்களில்

இருந்து ஏராளமான விவசாயிகள் வருகின்றனர். இவர்களது பட்டுக்கூடுகளுக்கு அரசு நிர்ணயம் செய்த விலைக்கு ஏற்றவாறு அடிப்படை விலை நிர்ணயித்து ஏலம் விடப்படுகிறது. இதற்கு வரியாக ஒவ்வொரு விவசாயியிடம் இருந்து ரூ.100க்கு 75 பைசா வசூலிக்கப்படுகிறது. விவசாயிகளுக்கு பட்டு கூட்டிற்கான பணம் உடனுக்குடன் அன்றைய தினமே வழங்கப்படுகிறது. வங்கி பரிவர்த்தனை மூலமாக பணம் வழங்குவதால் விவசாயிகள் ஏலத்திற்கு பின்னர் நீண்ட நேரம் காத்திருக்க வேண்டியதில்லை.

நேற்று முன்தினம் (25ம் தேதி) வெண்பட்டு கிலோ ரூ.520க்கு விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. விலை நிர்ணயம் விவசாயிகளின் நேரடி பார்வையில் செய்யப்படுகிறது. பட்டு கூடு அங்காடியின் ஏலத்தை கண்காணிக்க கேமரா வைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் மாவட்ட நிர்வாக அலுவலகத்தில் இருந்து கண்காணிக்க முடியும்.

காஞ்சிபுரம் பட்டு இணையத்தில் (டான் சில்க்) பட்டு நூலுக்கு அரசு அன்றாடம் விலை நிர்ணயம் செய்கிறது. அதன் அடிப்படையில் விவசாயிகளின் பட்டுக்கூடுகளை 100 கிராம் எடை போட்டு, அவற்றை எண்ணி கணினியில் கணக்கிட்டு பட்டுக் கூட்டிற்கு அடிப்படை விலை நிர்ணயம் செய்யப்படுகிறது. நூற்பாளர்கள் ஏலம் எடுத்தவுடன் உடனடியாக விவசாயிக்கு பணம் பட்டுவாடா செய்யப்படுகிறது. மேலும் இங்கு அரசின் அனைத்து மானிய திட்டங்களையும் செயல்படுத்தி வருகிறோம்.

இவ்வாறு அதிகாரிகள் கூறினர்.  கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவிலை அடுத்த ஆரல்வாய் மொழியை சேர்ந்த பட்டு விவசாயி பாலமுருகன் கூறும் போது, ‘‘நான் 2 ஏக்கர் பரப்பளவில் பட்டுக்கூடு வளர்த்து வருகிறேன். 1 மாதத்திற்கு 80 கிலோ பட்டுக்கூடு கிடைக்கிறது. பட்டுக்கூடு வளர்ப்பை கடந்த 1 வருடமாக செய்து வருகிறேன். மற்ற பட்டுக்கூடு அங்காடிகளை விட தர்மபுரியில் அதிக விலை கிடைப்பதால் இங்கு பட்டுகூடுகளை விற்க வந்தேன்,’’ என்றார்.

## அரியலூர் மாவட்டத்தில் பரவலாக மழை உழவுப் பணிகளில் விவசாயிகள் மும்முரம் அரசும் கை கொடுக்க கோரிக்கை

அரியலூர்:அரியலூர் மாவட்டத்தில் தற்போது ஆங்காங்கே மழை பெய்து வருவதால் விவசாயிகள், விவசாய பணிகளில் தீவிரம் காட்டி வருகின்றனர். எனினும் விவசாயிகள் பணிகளை செம்மையாக செய்யும் வகையில் அரசும் தேவையான உதவிகளை செய்து தர வேண்டும் என்ற கோரிக்கையும் எழுந்துள்ளது.

அரியலூர் மாவட்டத்தில் கடந்தாண்டு பருவமழை பொய்த்ததால், ஏரிகள் நீர் வரத்தின்றி வறண்டது. இதனால் விவசாயம் பொய்த்துப் போனது. ஆனால் இந்தாண்டு ஒரளவு மழை பெய்ததா லும், ஏரிகளுக்கு ஓரளவு தண்ணீர் வந்துள்ளதாலும் மாவட்டம் முழு வதும் விவசாய பணிகள்

தீவிரமாக நடந்து வருகிறது. ஆனால் ஆங்காங்கே நடந்து வரும் தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதியளிப்பு திட்டத்தின் காரணமாக விவசாய பணிகளுக்கு ஆள் கிடைக்காத நிலை பல இடங்களில் ஏற்பட்டுள்ளது. இதனால் விவசாயிகளுக்கு, விவசாய பணிகளுக்காக வெளியூர்களில் இருந்து ஆட்கள் கொண்டு வர வேண்டியுள்ளதால், செலவுகளும் அதிகரித்துள்ளது.

இதனால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

தற்போது மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் மழையை மட்டுமே நம்பி பருத்தி, மக்காசோளம் போன்ற மானாவாரி பயிர்களை பயிரிட்டு வருகின்றனர். கடந்த காலங் களை விட இந்தாண்டு உழவு கூலி, ஆள் கூலி, விதை, பயிர் ஆகியவற்றின் விலை உயர்வு விவசாயிகளை மேலும் கவலை கொள்ள வைத்துள்ளது.

மாவட்டத்தில் செந்துறை சுற்று வட்டார பகுதிகளான ராயம்புரம், பொய்யாதநல்லூர், பொட்ட வெளி, குழுமூர் பகுதிகளில் உழவு ஓட்ட டிராக்டருக்கு ஒரு மணி நேரத்திற்கு கடந்தாண்டு ரூ.700 ஆனது. தற்போது இது ஆயிரம் ரூபாயாக அதிகரித்துள்ளது. ஏர் மாட்டுக்கு கடந்தாண்டு ரூ.1000மும், இந்தாண்டு ரூ.1300ம்

ஆகிறது. விதைப்பு கூலி கடந்தாண்டு ரூ.200ஆக இருந்தது. இந்தாண்டு ரூ.250 ஆகவும், விதை விலையும் அதிகரித்துள்ளது.

உரம், பூச்சி கொல்லி மருந்து, களையெடுப்பு என உற்பத்தி செலவு அதிகரித்துள்ள நிலையில், விவசாயிகளுக்கு செலவு செய்யும் அளவுக்கு லாபம் கிடைக்குமா என்ற கவலையும் மேலோங்கி உள்ளது.

இருப்பினும் பாரம்பரிய தொழிலான விவசாயத்தை விவசாயிகள் கைவிட முடியாத நிலையில், அவர்களுக்கு தேவையான உதவிகளை செய்து தர வேண்டும் என அரசுக்கு விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

### பயிர்காப்பீட்டு தொகை விவசாயிகளின் வங்கி கணக்கில் வரவு வைக்கப்படும் திருவாரூர் கலெக்டர் தகவல்

திருவாரூர், : திருவா ரூர் மாவட்டகலெக்டர் நடராஜன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

திருவாரூர் மாவட்டத்தில் கடந்த ஆண்டு வறட்சி காரணமாக விவசாய சாகுபடி பணிகள் பாதிக்கப்பட்டதால் முதல்வர் உத்தரவின்பேரில் அமைச்சர்கள் மற்றும் உயர் அதிகாரிகள் குழுவினர் வறட்சிப் பகுதிகளை பார்வையிட்டு ரூ 140 கோடி நிவாரணமாக வழங்கப்பட்டது.

மேலும் திருவாரூர் மாவட்டத்தில் கடந்த ஆண்டு சாகுபடி செய்த ஒரு லட்சத்து 76 ஆயிரத்து 4 விவசாயிகளுக்கு அவர் கள் செலுத்த வேண்டிய பயிர்காப்பீட்டு பிரீமியத் தொகை ஏக்கர் ஒன்றுக்கு ரூ 174 வீதம் மூன்று லட்சத்து 34 ஆயிரத்து 500 ஏக்கருக்கான தொகை ரூ 27 கோடி தமிழக அரசால் பயிர் காப்பீட்டு நிறுவனத்திற்கு செலுத்தப்பட்டது.

அதன் மூலம் தற்போது மாவட்டத்தில் உள்ள 27 குறு வட்டங்களிலும் உள்ள ஒருலட்சத்து 76 ஆயிரத்து 4 விவசாயிகளுக்கும் ரூ 277 கோடி இழப்பீட்டு நிவாரணம் வழங்க மத்திய, மாநில அரசுகள் மூலம் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இந்த தொகை தேசிய வேளாண் காப்பீட்டு நிறுவனத்தின் சென்னை மண்டல அலுவலகம் மூலம் விவசாயிகளின் வங்கி கணக்கில் விரைவில் வரவு வைக்கப்படும் என்று கலெக்டர் நடராஜன் தெரிவித்துள்ளார்.

### மாவட்டத்தில் விவசாய மேம்பாட்டு திட்டங்கள்

காஞ்சிபுரம்: விவசாய மேம்பாட்டிற்கு பல்வேறு திட்டங்கள் நடைபெறுகிறது என கலெக்டர் சித்திரசேனன் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.  அறிக்கை

வருமாறு.

காஞ்சிபுரம் மாவட்டம் மதுராந்தகம் வட்டம் கம்ஸலாபுரம், சிறுநல்லூர், ஜமீன்எண்டத்தூர் ஆகிய கிராமங்களில் வேளாண்மை துறை மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் மகாத்மா காந்தி வேலை வாய்ப்பு உறுதி, மண்புழு உரம், திருந்திய நெல்சாகுபடி, இயற்கை உரம் தயாரிப்பது, கால்நடை குட்டைகள் தயாரிப்பது, நீர்வடி மேம்பாட்டு முகமை ஆகிய திட்டங்களால் பல்வேறு பணிகள் நடந்து வருகின்றன.

இந்த கிராமத்தில் தமிழ்நாடு நீர்வள, நிலவள திட்டத்தின் கீழ் உழவர் சுய உதவி குழுவுக்கு ரூ.50,000 சுழல் நிதி வழங்கப்பட்டுள்ளது. தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் விசை களை எடுக்கும் கருவி வழங்கப்பட்டுள்ளது.

ஒருங்கிணைந்த தோட்டக்கலை வளர்ச்சி திட்டத்தின் கீழ் மாங்கன்றுகள் 50% மானியத்தில் வழங்கப்பட்டுள்ளது. நீர்வடி மேம்பாட்டு முகமை மூலமாக நெற்களம், குளம் தூர்வாருதல் பணி, குழியான குட்டை, கால்நடை குட்டை அமைக்கப்பட்டுள்ளது.

இப்பகுதியில் பல்வேறு திட்டங்கள் மூலம் விவசாய நிலங்கள் மேம்படுத்தப்பட்டு பயிர்கள் அதிக மகசூல் கிடைக்கும் வகையில், விவசாயிகளால் மிகுந்த ஆர்வத்துடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதனால், விவசாய பொருட்களின் மேம்பாடும், தோட்டக்கலை துறை மேம்பாடும் குறைந்த நீர் பாசனத்தில் அதிக மகசூல் பெறும் அளவிற்கு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

எனவே இந்த திட்டங்களில் விவசாயிகள் சம்பந்தப்பட்ட வேளாண்மைத்துறை அலுவலர்களை அணுகி திட்டங்கள் பற்றி தெரிந்து பயனடையுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

## தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத்தில் 200 மூட்டை பருத்தி ஞ்4 லட்சத்திற்கு விற்பனை

நாமக்கல்: நாமக்கல் தொடக்க வேளாண்மை கூட்டுறவு  விற்பனை சங்கத்தில் 200 மூட்டை பருத்தி ஞ்4 லட்சத்திற்கு ஏலம் போனது .

நாமக்கல் மாவட்ட தொடக்க வேளாண்மை கூட்டுறவு விற்பனை சங்கத்தில்

வாரந்தோறும் வியாழக்கிழமைகளில் பருத்தி ஏலம் நடைபெற்று வருகிறது. அதன்படி நேற்று நடைபெற்ற ஏலத்தில் நாமக்கல், மோகனூர், எருமைப்பட்டி, வளையப்பட்டி, புதுச்சத்திரம் உள்ளிட்ட பகுதிகளை சேர்ந்த 80 விவசாயிகள் கலந்து கொண்டனர். இதில் விவசாயிகள் கொண்டு வந்திருந்த 200 மூட்டை பருத்தி ஞி 4 லட்சத்திற்கு ஏலம் போனது . இதில் ஆர்சி எச் ரகம் ஒரு குவிண்டால் ஞி5300 முதல் 5650 வரையிலும், டிசிஎச் ரகம் ஞி 5500 முதல் ஞி 5890 வரையிலும் ஏலம் போனது.

## சான்று பெற்ற தரமான விதைகளை விதைத்து அதிக மகசூல் பெறலாம்

கரூர், : சான்று பெற்ற தரமான விதைகளை விதைத்து அதிக மகசூல் பெறலாம் என்று கரூர் மூத்த வேளாண்மை அலு வலர் ரமேஷ் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது, விவசாயத்தின் முக்கிய பங்கு வகிக்கும் இடுபொருள் விதையாகும். தரமான விதைகளை விதைப்பதன் மூலம் நல்ல மகசூல் பெற முடியும். தரமான விதை என்பது விதைச்சான்று துறையினரால் பல கட்டங்களில் வயல்மட்ட ஆய்வு மற்றும் விதைப்பரிசோதனை செய்யப்பட்ட சான்று விதைகளே ஆகும்.

விதைப்பரிசோதனை நிலையத்தில் புறத்தூய்மை, ஈரப்பதம், முளைப்புத்திறன், பிறரகக் கலப்பு என 4 விதமான பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்படுகின்றன.

புறத்தூய்மை என்பது விதையின் சுத்தத்தை குறிப்பதாகும். புறத்தூய்மையில் களை விதைகள், பிற பயிர் விதைகள் மற்றும் உயிர்ப்பற்ற பொருள் ஆகியவை பரிசோதிக்கப்படுகின்றன.

விதை பரிசோதனை நிலையத்தில் பயிர் வாரியாக ஈரப்பதம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. விதை களில் ஈரப்பதம் நிர்ணயிக்கப்பட்ட அளவை விட அதிகமாக இருந்தால் அதிக பூச்சி மற்றும் நுண்ணுயிர் தாக்குதலுக்கு உட்பட்டு அதன் தரம் குறைய வாய்ப்புள்ளது.

விதை பரிசோதனை நிலையத்தில் விதை மாதிரிகள் முளைப்புத்திறன் பரிசோதிக்கப்படுகின்றன.

ஒவ்வொரு விதைக்கும் குறிப்பிட்ட முளைப்புத்திறன் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

முளைப்புத்திறன் குறைந்தால் பயிர் எண்ணிக்கை குறைந்து மகசூல் பாதிக்கப்படுகிறது.

பிற ரகக் கலப்பு என்பது ஒரே பயிரில் வேறு ரக விதைகள் கலந்திருப்பது.

குறிப்பிட்ட அளவுக்கு மேல் பிறரகக் கலப்பு இருந்தால் விதைகள் விற்பனைக்கு பரிந்துரைக்கப்படுவதில்லை.

விதைப் பரிசோதனையினால் ஏற்படும் நன்மைகள்

வேளாண்மை துறையினரால் விதைப்பண்ணை அமைக்கப்பட்டு உற்பத்தி செய்யப்படும் விதைகளுக்கும் தனியார் உற்பத்தியாளர்களின் விதை களுக் கும் விதைப் பரிசோதனை முடிவின் அடிப்படையிலேயே சான்று அளிக்கப்படுகின்றன.

இதன் மூலம் தரமான விதைகளை உற்பத்தி செய்து விற்பனை செய்ய பரிசோதனை முடிவுகள் பயன்படுகின்றன.

விவசாயிகள், விதை விற்பனையாளர்கள், உற்பத்தியாளர்கள் தங்களிடம் இருப்பில் உள்ள விதைகளின் தரத்தை அறிய பகுப்பாய்வு முடிவுகள் பயன்படுகின்றன.

விதைப் பரிசோதனை கட்டணம்

பணிவிதை மாதிரிகளுக்கு ஒரு மாதிரிக்கு ரூ.30 (முப்பது மட்டும்) வசூலிக்கப்படுகிறது. இந்த கட்டணத்தை நேரிலோ அல்லது மணி ஆர்டரிலோ வேளாண்மை அலுவலர், விதைப்பரிசோதனை நிலையம், 2வது குறுக்குத்தெரு, திண்ணப்பா நகர், காந்திகிராமம், கரூர் என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

பணி விதை மாதிரிகள் விதைப் பரிசோதனை நிலையத்திற்கு பகுப்பாய்வுக்கு அனுப்பும் போது, பகுப்பாய்வு முடிவுகள் அனுப்பப்பட வேண்டிய முகவரி, பயிர், ரகம், குறியீட்டு எண், விதை அளவு ஆகிய விபரங்கள் அடங்கிய சீட்டு எழுதி மாதிரியுடன் அனுப்ப வேண்டும்.

எனவே, விவசாயிகள் விதைச்சான்று துறையின் மூலம் பல்வேறு கட்டடங்களில் பரிசோதனை செய்யப்பட்டு சான்று பெற்ற தரமான விதைகளையே விதைத்து அதிக மகசூல் பெறலாம்.

இவ்வாறு மூத்த வேளாண்மை அலுவலர் ரமேஷ் தெரிவித்துள்ளார்.

## நெல் விதைக்கும் கருவி இருக்கா? 40 சதவீதம் விதை மிச்சம் ஆகும்

திருச்சுழி: நேரடி நெல் விதைக்கும் கருவியை கொண்டு விதைப்பதன் மூலம் 40 சதவீதம் விதை களை மிச்சப்படுத்தி அதிக மகசூல் பெறலாம் என வேளாண் துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

விவசாயிகள் நெல் சாகுபடி செய்ய டிராக்டர், நாட்டு கலப்பை கொண்டு விதைப்புகளை மேற் கொண்டு வருகின்றனர். விதைப்புப் பணிகளுக்கு கூலித் தொழிலாளர்கள், கால்நடைகளையே அதிகம் நம்ப வேண்டி நிலை உள்ளது. தற்போதைய சூழ்நிலையில் காலம் தாழ்த்தி பயிர் செய்வதால் மகசூல் குறைவதோடு, அதிகளவில் விதைகளும் தேவைப்படுகிறது. மேலும் நெருக்கடி யாக நீர், உரம் மற்றும் சூரிய ஒளி முழுமையாக கிடைக்காத நிலை உருவாகிறது. இந்த பிரச்னைகளை நிவர்த்தி செய்ய வேளாண் அதிகாரிகள் வழங்கியுள்ள ஆலோசனைகள்:

விதைப்பு கருவியின் மூலம் குறைந்த செலவில் ஒரு ஏக்கர் நிலத்தை 45 நிமிடங்களில் விதைப்பு செய்யலாம். இதனால், ஏக்கருக்கு ரூ.500 வரை மிச்சமாகும். தவிர இதன் மூலம் பயிர் செய்யும் போது 40 சதவீத விதை களை மிச்சப்படுத்த முடி யும். பயிர்களுக்கிடையே சரியான இடைவெளி பராமரிக்கப்படுவதால் சீரான விகிதத்தில் சத்துக்கள் கிடைக்கும். நேரடி நெல் விதைப்பில் விதைத்த 3 முதல் 8 நாட்களுக்குள் ஏக்கருக்கு பிரிட்டிலாகுளோர் 175 கிராம் அல்லது பென்டிமெத்தலின் 400 கிராம் வீதம் 25 கிலோவை மணலுடன் கலந்து வயலில் போதுமான ஈரப்பதம் இருக்கும்போது தெளிக்க வேண்டும். விதைத்த 25வது நாளில் களையை கட்டுப்படுத்த 2,4 டிஇஇ சோடியம் உப்பை ஏக்கருக்கு 200 கிராம் வீதம் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவேண்டும். பயிர் வளர்ந்த 15 முதல் 20வது நாளில் ஏக்கருக்கு பிஸ்பைரிபேக் சோடியம் 10 கிராம் அல்லது அசிம்சல்பியூரான் 15 கிராம் என ஏதா வது ஒரு களைக்கொல்லி யை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து கைதெளிப்பானை கொண்டு சீராக தெளிக்க வேண்டும். இதன் மூலம் இலைக் களைகள் மற்றும் கோரை, புல் வகைகளை கட்டுப்படுத்தலாம்.

இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

### கம்பு சாகுபடியில் கலக்கல் லாபம் விவசாயிகளுக்கு ஆலோசனை

திருச்சுழி: இரவை பருவத்தில் கம்பு பயிரிடுவது குறித்து வேளாண் துறை சார்பில் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து வேளாண் துறை அதிகாரிகள் கூறியிருப்பதாவது:

இரவை பருவத்தில் கம்பு பயிரிடுவதற்கு கோ7, கோ(சியு) 9, ஐசிஎம்வி221, ராஜ்171, எக்ஸ்7 ஆகியவை ஏற்ற ரகங்கள் ஆகும். எக்டேருக்கு 3.75 கிலோ விதை இடவேண்டும். எக்டேருக்கு 7.5 சென்டில் நாற்றாங்கால் அமைக்க வேண்டும். 3*1.5மீ அளவு கொண்ட 6 படுக்கைகளை ஒரு சென்டில் அமைத்து, அரை மீட்டர் கால்வாய், அரை அடி ஆழத்தில் ஒவ்வொரு படுக்கையை சுற்றிலும் அமைக்க வேண்டும். எக்டேருக்கு 750 கிலோ தொழு உரம் இடவேண்டும்.

தேன் ஒழுகல் நோய் பாதித்த விதைகளை நீக்க 10 லிட்டர் நீரில் ஒரு கிலோ உப்பினை கரைத்து, விதைகளை அதில் கொட்டவேண்டும். மிதக்கும் விதைகளை நீக்கி, நல்ல தண்ணீர் கொண்டு 3 அல்லது 4 முறை கழுவி நிழலில் உலர்த்த வேண்டும். தண்டு ஈ மற்றும் தண்டு துளைப்பான் நோய் பாதிப்பை தடுக்க, வேளாண் அதிகாரிகளுடன் ஆலோசித்து விதை முலாம் பூச வேண்டும்.

அடிச்சாம்பால் நோய் தாக்குதலில் இருந்து தப்பிக்க, மெட்டலாக்சில் 6 கிராமுடன், 5 மில்லி தண் ணீர் சேர்த்து, ஒரு கிலோ விதையுடன் கலக்க வேண்டும்.

600 கிராம் அசோஸ்பைரில்லம் மற்றும் பாஸ் போ பேக்டீரியாவுடன் ஒரு எக்டேருக்கு உண்டான விதையை கலந்து உயிர் உரமாக விதைக்க வேண்டும். விரல்களால் ஒரு செமீ ஆழத்திற்கு கோடுகள் இட்டு, ஒரு படுகைக்கு அரை கிலோ விதையினை தூவி மண்ணில் மூடவேண்டும். மீதைல் பாரதி யான் மருந்தினை விதைத்தவுடன் எறும்புகளில் இருந்து பாதுகாக்கலாம்.

நாற்றுகளை தண்டு ஈ தாக்குதலில் இருந்து காப்பதற்கு, கார்போபியூரான் 3ஜி 600 கிராம் அல்லது போரேட் 10ஜி180 கிராம் தூவி இட வேண்டும். 30 செமீ கால்வாய் மூலம் நீர்ப்பாசனம் செய்ய வேண்டும்.

மண்ணில் நீர் உறிஞ்சிம் வரை மட்டுமே நீர்ப்பாய்ச்ச வேண்டும். வேளாண் அலுவலர்களின் அறிவுரைப்படி, 45*15 செமீ இடைவெளியில், 3 முதல் 5 செமீ ஆழத்தில் பார்களின் பக்கவாட்டில் வேர்களை 40 லிட்டர் நீரில் ஆயிரம் கிராம்

அசோஸ்பைரில்லம் கலந்த கலவையில் 30 நிமிடம் நனைத்து அதன்பின் நட வேண்டும்.

சாதாரண ரகங்களுக்கும், வீரிய ஒட்டுரகங்களுக்கும் ஏற்ப அளவுகளில் உரமிட வேண்டும்.

இதுதொடர்பான கூடுதல் விபரங்களுக்கு அந்தந்த பகுதி வேளாண் அலுவலரையோ, வட்டார வேளாண் உதவி இயக்குநர் அலுவலகத்தையோ அணுகலாம் என வேளாண் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

**மெட்டாலாவில் கத்தரி விலை உயர்ந்தது தக்காளி வரத்து அதிகரித்தது**

நாமகிரிப்பேட்டை: மெட்டாலாவில் தக்காளி வரத்து அதிகரித்துள்ளதால் விலை குறைந்தது. கத்தரி விலை உயர்ந்துள்ளது.

நாமக்கல் மாவட்டம் நாமகிரிப்பேட்டை அடுத்த மெட்டாலாவில் தினசரி காய்கறி மார்க்கெட் நடக்கிறது. இங்கு சுற்றுப்பகுதியை சேர்ந்த மூலப்பள்ளிப்பட்டி, நாமகிரிப்பேட்டை, கார்கூடல்பட்டி, கப்பலூத்து, மங்களபுரம், உரம்பு உள்ளிட்ட பகுதிகளில் இருந்து விவசாயிகள் காய்கறிகளை கொண்டு வருகின்றனர்.

மெட்டாலா காய்கறி மண்டிகளில் நடக்கும் ஏலத்தின் மூலம் வியாபாரிகளுக்கு விற்பனை செய்கின்றனர்.

இந்நிலையில் காமதேனு உழவர் மன்ற கூட்டமைப்பு சார்பில் துவங்கப்பட்டுள்ள காய்கறி ஏல விற்பனை மையத்தில் நேற்றைய விலை விபரம்:

தக்காளி வரத்து நேற்று அதிகரித்திருந்தது இதனால் விலை கிலோ ரூ. 9 ஆக குறைந்தது. ஆபிஸ் தக்காளி அதிகப்பட்சமாக கிலோ ரூ. 13 வரை விற்றது. கத்தரிக்காய் விலை உயர்ந்துள்ளது. நேற்று முன்தினம் ரூ.18 ஆக இருந்த கத்தரி நேற்று ரூ. 2 அதிகரித்து கிலோ ரூ.20 வரை விற்பனையானது. வெண்டை கிலோ ரூ. 12, அவரைக்காய் ரூ. 38, வெங்காயம் கிலோ ரூ. 45, பீர்க்கங்காய் கிலோ ரூ. 14, புடலை ரூ. 10 க்கும் விற்பனையானது.  நேற்று நடந்த ஏலத்தில் 3.5 டன் காய்கறி விற்கப்பட்டது.

பயிர்களுக்கு வளர்ச்சியூக்கியாக பயன்படும் பனம்பழம் கரைசல் வேளாண் தொழில்நுட்ப வல்லுநர் தகவல்

ராமநாதபுரம்: பயிர் வளர்ச்சிக்கு பனம்பழம் கரைசலை பயன்படுத்த லாம் என வேளாண் தொழில்நுட்ப வல்லுநர் ஏகாம்பரம் தெரிவித்துள்ளார்.

மாவட்டத்தில் ராமநாதபுரம், மண்டபம், சாயல் குடி, கமுதி, கடலாடி, திருப்புல்லாணி, திருவாடானை உள்ளிட்ட பகுதிகளில் பனைமரங்கள் ஏராளமாக உள்ளன. வறட்சியை தாங்கி வளரும் இம்மரங்கள் முன்பு வீடு கட்ட பயன்படுத்தப்பட்டன. பனை சட்டம், ஓலை, மட்டை ஆகியவை அனைத்தும் மக்கள் பயன்பாட்டிற்கு உகந்ததாகும். மட்டையிலிருந்து கயிறு, தும்பு தயாரிக்கலாம். பனையிலிருந்து பதனீர் எடுத்து கருப்பட்டி தயாரிக்கப்பயன்படுகிறது. பலவித பயன்தரும் பனைமரங்கள் தற்போது அழிக்கப்பட்டு வருகின்றன.

பயிர் வளரவும், விளைச்சல் அதிகரிக்கவும் உரம் வாங்க விவசாயிகள் அதிகளவு செலவு செய்ய வேண்டி உள்ளது. இந்நிலையில் பனம்பழம் கரைசல் தயாரித்து உரங்களுக்கு பதிலாக பயன்படுத்தலாம் என ஆலோ சனை வழங்கப்பட்டுள்ளது. இதுகுறித்து வேளாண் தொழில்நுட்ப வல்லுநர் ஏகாம்பரம் கூறுகையில், Ôபயிர்கள் வளர்வதற்கு சிறந்த வளர்ச்சியூக்கியாக பனம்பழம் கரைசல் பயன்படுகிறது. இந்த கரைசலை பயன்படுத்துவதன் மூலம் நிலத்தில் மண் வளம் பெருகும், மண்ணில் உள்ள நுண்ணுயிரிகள் அதிகரிக்கும், பயிருக்கு நல்ல வளர்ச்சி ஊக்கியாக செயல் படும். இதனால் பயிர் நன்றாக வளர்ந்து மகசூல் அதிகரிக்கும். பழக்கரைசல் தெளிப்பதன் மூலம் பூச்சி தாக்குதலும் குறையும்.

ஒரு ஏக்கருக்கு 10 கிலோ பனம்பழம், 5 கிலோ பசுமாடு சாணம். இதனுடன் 20 லிட்டர் தண்ணீர் கலந்து ஒருவாரம் வரை வைத்திருக்க வேண்டும். இந்த கரைசலை தினமும் லேசாக கலக்கிவிட்டு வரவேண்டும். ஒரு வாரத்திற்கு பின்னர் கரைசலில் ஒரு லிட்டர் எடுத்து இதனுடன் 10 லிட்டர் தண்ணீர் கலக்க வேண்டும். இதனை நெல், சிறுதானிய பயிர்கள், காய்கறி செடிகள், பூச்செடிகள், பழவகை செடிகள் மீது தெளிக்கலாம். இதனால் பயிர் மற்றும் செடிகளில் வளர்ச்சி அதிகரிக்கும். இந்த

கரைசலை தண்ணீர் பாய்ச்சும்போது வேர் வழியாக செல்லும் வகையில் தண்ணீருடன் கலந்துவிடலாம். இதனால் மண்புழு அதிகம் உற்பத்தியாகும். பயிர்களுக்கு நேரடியாக காற்று மூலம் கிடைக்ககூடிய தளை சத்துகள் கிடைக்கும். மண்ணில் உள்ள மணிசத்து நேரடியாக பயிருக்கு கிடைக்கும். காய்கறிகள் திரட்சியாகவும், பசுமையாகவும் இருக்கும். மண் இருக்கம் குறைவு ஏற்படுவதன் மூலம் வேர்கள் மிருதுவாக செல்லும் வாய்ப்பு ஏற்படும். இதில் செலவும் குறைவு. இந்த தொழில்நுட்பத்தை பயன்படுத்தி விவசாயிகள் பயன்பெறலாம்Õ என்றார்.

### மாவட்டத்தில் 21 இடங்களில் கால்நடை பாதுகாப்பு திட்ட முகாம் அக்.1 முதல் துவக்கம்

ராமநாதபுரம்:  கால்நடை பராமரிப்பு துறை மூலம் மாவட்டத்தில் 21 இடங்களில் அக்.1ம் தேதி முதல் கால்நடை பாதுகாப்பு திட்ட முகாம் நடைபெற உள்ளது என கலெக்டர் நந்தகுமார் அறிவித்துள்ளார்.

இது குறித்து அவர் கூறியதாவது: கால்நடை பராமரிப்பு துறை மூலம் மாவட்டத்தில் 21 இடங்களில் அக்.1ம் தேதி முதல் கால்நடை பாதுகாப்பு திட்ட முகாம் நடைபெற உள்ளது. இதில் கால்நடைகளுக்கு ஆண்மை நீக்கம், அறுவை சிகிச்சை, சினை பரிசோதனை, மலடு நீக்க சிகிச்சை, கருவூட்டல் ஆகிய சிகிச்சைகள் வழங்கப்படும். மேலும் சிறந்த கன்றுகளுக்கு பரிசு வழங்கப்படும். முகாம் நடைபெறும் இடங்கள், தேதி உள்ளிட்ட விபரங்கள் (அடைப்புகுறிக்குள் முகாம் நடைபெறும் கால்நடை மருந்தகம்) வருமாறு;

அக்.1 - போகலூர் ஒன்றியம் (வீரவனூர்) பைரவனேந்தல்.

அக்.4 - கடலாடி ஒன்றியம் (மேலக்கிடாரம்) புனவாசல்.

அக்.5 - நயினார்கோவில் ஒன்றியம் (பாண்டியூர்) சிறுவயல்; மண்டபம் ஒன்றியம் (உச்சிப்புளி) பிரப்பன்வலசை.

அக்.8 - திருப்புல்லாணி ஒன்றியம், காவல்காரன்வலசை.

அக்.8 - ராமநாதபுரம் ஒன்றியம் (சித்தார்கோட்டை) கலையனூர்.

அக்.8 - ஆர்.எஸ். மங்கலம் ஒன்றியம் (சோழந்தூர்) பனிக்கோட்டை.

அக்.9 - திருவாடானை ஒன்றியம் (ஊரணிக்கோட்டை) சிறுமலைக்கோட்டை.

அக்.11 - கடலாடி ஒன்றியம், உச்சிநத்தம்; ராமநாதபுரம் ஒன்றியம்

(சூரன்கோட்டை) கழுவூரணி.

அக்.12 - மண்டபம் ஒன்றியம் (இடையவர்வலசை) அருப்புக்காடு.

அக்.14 - நயினார்கோவில் ஒன்றியம் (பாண்டியூர்) எஸ்வி மங்கலம்.

அக்.17 - மண்டபம் ஒன்றியம், (ராமேஸ்வரம்) தெற்கு கரையூர்; ராமநாதபுரம் ஒன்றியம் (தொருவளூர்) காரேந்தல்; திருவாடானை ஒன்றியம், மாவூர்.

அக்.18 - ஆர்எஸ் மங்கலம் ஒன்றியம் (ஆனந்தூர்) சாத்தனூர்.

அக்.21 - பரமக்குடி ஒன்றியம் (பார்த்திபனூர்) ஏனாதிகோட்டை.

அக்.22 - திருப்புல்லாணி ஒன்றியம் (கீழக்கரை) புதுமாயாகுளம்.

அக்.28 - நயினார்கோவில் ஒன்றியம் (பாண்டியூர்) தேர்தங்கல்.

அக்.30 - கமுதி ஒன்றியம் (பெருநாழி) டிவிஎஸ்புரம்; பரமக்குடி ஒன்றியம் (மேலாய்குடி) வாலான்குடி.

## இன்றைய வேளாண் செய்திகள்

## 08.10.2013

### கோபி வேளாண்மை கூட்டுறவு சங்கத்தில் ரூ.8½ லட்சத்துக்கு வாழைப்பழங்கள் விற்பனை



கோபிசெட்டிபாளையம்

கோபி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நேற்று முன்தினம் வாழைப்பழம் ஏலம் நடைபெற்றது. இந்த ஏலத்துக்கு மொத்தம் 8 ஆயிரம் தார் வாழைப்பழங்களை விவசாயிகள் விற்பனைக்கு கொண்டு வந்து இருந்தனர். இதில், கதலி ரக வாழைப்பழம் கிலோ ஒன்று 35 ரூபாய்க்கும், நேந்திரன் ரகம் 40 ரூபாய் 50 காசுக்கும் விலை போனது. செவ்வாழை ரக வாழைப்பழம் தார் ஒன்று ரூ.680–க்கும், தேன்வாழை ரூ.600–க்கும், ரொபஸ்டா ரூ.480–க்கும், மொந்தன் ரூ.510–க்கும், பூவன் ரூ.580–க்கும், பச்சைநாடன் ரூ.310–க்கும், ரஸ்தாளி ரூ.425–க்கும் விலை போனது. வாழைப்பழங்கள் மொத்தம் ரூ.8 லட்சத்து 50 ஆயிரத்துக்கு விற்பனை ஆனது. கோபிசெட்டிபாளையம்,

சத்தியமங்கலம், ஈரோடு, திருப்பூர், கோவை ஆகிய பகுதிகளை சேர்ந்த வியாபாரிகள் வாழைப்பழங்களை போட்டி போட்டு வாங்கிச் சென்றனர்.

இதேபோல் நடைபெற்ற தேங்காய் ஏலத்துக்கு 6 ஆயிரம் தேங்காய்கள் விற்பனைக்கு கொண்டு வரப்பட்டு இருந்தன. இதில், தேங்காய் ஒன்று குறைந்தபட்ச விலையாக 8 ரூபாய் 50 காசுக்கும், அதிகபட்ச விலையாக 14 ரூபாய் 70 காசுக்கும், சராசரி விலையாக ரூ.12–க்கும் விலை போனது. தேங்காய் மொத்தம் ரூ.80 ஆயிரத்துக்கு விற்பனை ஆனது.

**வெள்ளகோவில் வாரச்சந்தையில் முருங்கைக்காய் விலை உயர்வு**



வெள்ளகோவில்,

வெள்ளகோவில் வாரச்சந்தை நேற்று கூடியது. இங்கு விவசாயிகள் தங்களின் விளை நிலத்தில் விளைந்த முருங்கைக்காய் உள்ளிட்ட விளை பொருட்களை விற்பனை செய்வதற்காக கொண்டு வருகின்றனர். முருங்கைக்காய் சீசன் முடிவடைந்து விட்டதால் வாரச்சந்தைக்கு நேற்று குறைந்த அளவே முருங்கைக்காய்கள் கொண்டு வரப்பட்டு இருந்தன.

இதில் நீளமான முருங்கைக்காய் ஒன்று ரூ.2 வரை விலை போனது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர். தற்போது மழை இல்லாத நிலையிலும், மரத்தில் பூத்திருந்த பூக்கள் உதிர்ந்து வருவதாலும் இனிவரும் வாரங்களில்

முருங்கைக்காய் வரத்து குறைய வாய்ப்பு உள்ளது. இதனால் முருங்கைக்காய் விலை உயரும் என்றும் எதிர்பார்க்கப்படுவதாக கூறப்படுகிறது.

மேலும் வெள்ளகோவில் வாரச்சந்தையில் ஒரு கிலோ சின்ன வெங்காயம் ரூ.70, 2–வது தரம் ரூ.50, 3–ம் தரம் ரூ.30, பெரிய வெங்காயம் ரூ.30, கத்தரிக்காய் ரூ.40, அவரைக்காய் ரூ.30, பாகற்காய் ரூ.30, தேங்காய் ஒன்று ரூ.10–க்கும் விற்பனையானது.